விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (06.11.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 322

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# முக்கிய அமைச்சர்களுடன் ரணில் இரகசிய ஆலோசனை

## சுதந்திரக்கட்சியினுள் குழப்பம்

(கொழும்பு)

முக்கிய அமைச்சர்கள் 12 பேருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரகசியமாக சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

'அமைச்சரவை அந்தஸ்துக்கொண்ட 5 அமைச்சர்களுடனும், பிரதியமைச்சர்கள் 7பேருடனும் ரணில் விக்கிரசிங்க பேச்சு நடத்தியுள்ளார். நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் அவர் இரகசியமாக பேச்சு நடத்தியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் பாதுகாப்புக்கென குண்டு துளைக்காத கூண்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் போது குண்டு துளைக்காத கூண்டுப்பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

ரணிலின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் தற்போது அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளதையடுத்து கடந்த 3ஆம் திகதியில் இருந்து பொதுக்கூட்டங்களில் உரையாற்றும் போது குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டினை ரணில் பயன்படுத்தி வருகிறார்.கடந்த 3ஆம் திகதி தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் குண்டு துளைக்காத கூண்டிலிருந்து அவர் உரையாற்றினார். பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ ரணிலுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அவருக்கு தெரிவித்திருந்தார்.

ரணில் கலந்து கொள்ளும் கூட்டங்களை குறைத்துக்கொள் ளுமாறு அவர் கேட்டிருந்தார். இதுவரை மூன்று பாதுகாப்பு கூண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்பு படையினரின் ஆலோசனைகளுக்கு அமைய தேவையான இடங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.(ச-4)

## இராணுவ உளவாளி திருமலையில் சுட்டுக்கொலை

திருகோணமலையில் நேற்றிரவு 8.30 மணியளவில் இராணுவ உளவாளி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமின் தலைமையலுவலகம் அருகே பிரபல நகைக்கடை ஒன்றின் முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த் அந்த இளைஞன்மீது இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே அவர் பலியானார். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி படைத்தரப்பினரது உளவாளியாக அவர் செயற்பட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் சிறந்த ஜனாதிபதியை தெரிவு செய்வோம்

### வடக்கு கிழக்கு ஆயர்கள் கூட்டாக அறிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெறவேண்டுமென யாழ்ப்பாணம் ,மன்னார் ,திருகோணமலை மாவட்ட ஆயர்கள் மூவரும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மட்டு.திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆகியோர் கூட்டாக கையொப்பமிட்டு அறிக்கை யொன்றினை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அன்பார்ந்த மக்களே!

இவ் வருடம் நவம்பர் திங்கள் 17 ஆம் திகதி இலங்கையை அடுத்த 6வருடங்களுக்கு,சகல நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு ஆட்சி செய்யப்போகின்ற ஜனாதிபதி ஒருவரைத் தெரிந்தெடுக்கும் தேர்தல் இடம்பெற உள்ளது.

இவ்வேளையிலேயே தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்த அரசியல் உண்மையை வெகுவிழிப்புடனும் ,கடமையுணர்வுடனும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை

### இளம்பரிதி தெரிவிப்பு

(பளை)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விடுதலைப்புலிகள் எந்த முடிவினையும் எடுக்கவில்லை.

நிர்ப்பந்தங்கள் எதனையும் வழங்கவில்லை என யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டு மக்களின் ஜனாதிபதித்தேர்தல் பகிஷ்கரிப்பு கொள்கை குறித்து பளையில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தலைமைப் பணிமனையில் வைத்து கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலில் வாக்களிப்பதும் வாக்களிக்காமல் விடுவதும் மக்களின் பொறுப்பு. கடந்த கால அரசியல் வரலாற்றின் அடிப்படையில் நல்ல படிப்பினைகளையும் வரலாற்றில் தமக்குஏற்பட்ட இழைக்கப்பட்ட துரோகங்கள் பற்றியும் மக்கள் தெளிவாக உள்ளனர்.

அவ்வகையில் ஜனாதிபதித் தேர்தலினை புறக்கணிக்கும் முடிவினை யாழ்.குடாநாட்டு மக்கள் எடுத்திருக்கலாம். மக்களின் சுதந்திரமான முடிவாக இது இருப்பதால் அதற்கு ஏதுவான நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் எடுக்கும் போது அதற்கு புலிகள் தடையாக இருக்கமாட்டார்கள் என இளம்பரிதி கூறினார். (ச-4)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் பூர்த்தி

### பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் மோசடிகள் இடம்பெறுவதை தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸாரின் ரோந்து சேவைகளுக்காக மேலதிக வாகனங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராயவென கடந்த வியாழக்கிழமை பொலிஸ்மா அதிபர் சந்ரா பெண்ணான்டோ யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ்.வந்த அவர் அரச அதிபரைச்சந்தித்து தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் யாழ்.மாவட்ட பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிகளையும் இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார். இதேவேளை தேர்தல் காலத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதற்காக கொழும்பில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் மேலதிக பொலிஸ் யாழ்.குடாநாட்டுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் தேர்தல் காலத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ச)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662




# வட கிழக்கில் அதிகரிக்கும் படையினரின் வன்முறைகள்



அண்மைக்காலத்தில் படையினர், விடுதலைப்புலிகள் மீது ஒட்டு மொத்த படைகள் மீதான தாக்குதல்கள் குறித்து அதிகம் பேசப்படுகிறது. மாறி மாறி இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இது யுத்த நிறுத்த மீறல் என்று ஊடகங்கள் விவாதம் செய்கின்றன. இந்த நிலையில் தேர்தல் வேறு வந்துள்ளதனால் எல்லோரும் அது சம்பந்தமான நிகழ்வுகளை அதிகம் தூக்கி பிடிக்கின்ற சூழல் எழுந்துள்ளது. ஊடகங்களும் தமக்கு சார்பான கட்சிகள் மீதான தாக்குதல்களை விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் இங்கு எல்லோரும் வசதியாக வடகிழக்கில் ஏழை மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் குறித்து பேச மறந்து விடுகின்றனர். சுதந்திரத்திற்கு பின்னர் இனநெருக்கடிக்கு அரசாங்கங்களின் பதிலாக அடக்கு முறைகள் அதிகரித்த காலங்களில் அதிக வன்முறைகள் தமிழ் பொது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டன. இதில் படையினர் மட்டுமல்லாது பெரும்பான்மை குற்றவாளிகளும் பங்குபற்றியதை சகலரும் அறிவர்.

பல்வேறு காலகட்டங்களில் அவை வடகிழக்கை கடந்து நாடு முழுவதும் கலவரங்களாக வெடித்திருந்தன. வடகிழக்கிலும் வெளியிலும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன. பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்த நிலையில் ஐக்கியதேசிய கட்சியின் பிரேமதாஸ ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் குறிப்பாக 90களில் தமிழ் மக்களது பல பாரம்பரிய கிராமங்களும் பிரதேசங்களும் அபகரிக்கப்பட்டன. பல கிராமங்களை சேர்ந்தோர் அவற்றை கைவிட்டு வன்னிக்கும், இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்தனர். அதேபோல சந்திரிகா அம்மையாரின் ஆட்சி காலங்களிலும் இவ்விதமே இடம்பெற்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பிரதேசங்கள் மக்கள் வெளியேற்றப்பட்டு உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டன. இக்காலகட்டத்தில் ஏராளமான கொலைகளும், வன்முறைகளும் இடம்பெற்றன. பலர் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டனர். பலர் காணாமல் போனார்கள். அப்போதும் கூட எடுத்து கூறவில்லை. உலக நாடுகளும், உலக அமைப்புகளும் இவற்றை அறிந்து கொள்வதால் தமக்கு ஏதும் இலாபமில்லை என்பதனாலோ என்னவோ வாளாவிருந்து விட்டன. இப்போது போட்டிபோட்டு புலிகளை தடைசெய்கின்ற அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் அப்போது எங்கே போயிருந்தன என்று தெரியாது.

— என். ஜீவேந்திரன்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிக மோசமான மனித படுகொலைகளையும், கொடுமைகளையும் ஒரு சில மனித உரிமை அமைப்புகளை தவிர வேறு சர்வதேச அமைப்புகளோ ஆட்சிகளோ கண்டு கொள்ளாமை இன்னும் நாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

தற்போது வடகிழக்கில் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இராணுவத்தினர் பல்வேறு காரணங்களை காட்டி அப்பாவி மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். பல அப்பாவி இளைஞர்கள் மீது வடக்கிலும் கிழக்கிலும் துப்பாக்கி சூடுகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இதில் பல இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இது குறித்து அரசாங்கம் எவ்வித கண்டனங்களையோ அனுதாபங்களையோ வெளியிடவில்லை. இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எவ்வித நஷ்ட ஈட்டையும் வழங்கவில்லை. ஏனைய இனத்தவர்கள் இவ்வாறு வன்முறைகளில் கொல்லப்படும்போது இலட்சக்கணக்கில் நஷ்டஈடுவழங்குகின்ற அரசாங்கமும் அரசியல்வாதிகளும் தமிழர்கள் கொல்லப்படும் போது அவ்வாறு வழங்காததன் காரணம் மர்மமாகவே இருக்கின்றது சிலவேளை தமிழர்கள் இந்த நாட்டை சேர்ந்தவர்கள் அல்ல, அவர்கள் தனிநாடு ஒன்றுக்கு சொந்தமானவர்கள் என நம்புவதாக இருக்கலாம்.

இந்த வன்முறைகள் ஒருபுறமிருக்க படையினர் தமிழ் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்ற காடைத்தனங்களும் போர்காலங்களை போலவே தற்போது அதிகரித்து வருகின்றன.

சிறுமிகள் என்றாலும் சரி மூதாட்டிகள் என்றாலம் சரி இந்த காமுகர்களின் கண்களுக்கு ஒன்றாகவே தெரிகின்றனர். அண்மைக்காலத்தில் பல பாலியல் வல்லுறவு செயல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் இது குறித்து அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக வருகின்ற வன்முறைகள் குறித்து அரசாங்கமோ, பெரும்பான்மை ஊடகங்களோ கவனம் செலுத்தாத சூழலே இன்று காணப்படுகின்றது. அதேபோல புலிகளை பூதக்கண்ணாடி வைத்துப்பார்க்கின்ற அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் இவை குறித்து வாயே திறப்பதில்லை.

எனவே, இவ்வாறான ஒரு பக்கச்சார்பான சூழலில் தமிழர்கள் இவர்கள் குறித்தும் இவர்களது கருத்துகள் குறித்தும் அலட்டிக் கொள்ளமல் தமது எதிர்கால இலட்சியத்தை நோக்கி உறுதியுடன் பயனளிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படுமா!

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பாலியல்வல்லுறவு வன்முறைகள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இது கிராமங்கள், நகரங்கள் என்றில்லாமல் சகல பிரதேசங்களிலும் பரவலாக இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக இவ்வாறான செயற்பாடுகளில் முச்சக்கர வண்டிகளின் சாரதிகளே அதிகம் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக தனித்து பயணம் செய்கின்ற பெண்களை





கடத்தி அடைத்து வைத்து பாலியல் வன்புணர்வுகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

அதேபோல வீடுகளில் வேலைக்காக அமர்த்தப்பட்டுள்ள சிறுமிகளும், பெண்களும் இவ்வாறான பாலியல் வல்லுறவுகளுக்கு அதிகம் உட்படுகின்றனர். வீட்டு எஜமானனாலும் ஏனைய உறவினர்களினாலும் அதிகமாக இந்த வன்முறைகள் மேற் கொள்ளப்பட்டுகின்றன. இவை குறித்து முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் காவல் துறையினர் இது குறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்வதில்லை என்பதே பாதிக்கப்பட்டவர்களின் கருத்தாக இருக்கின்றது.

விசேடமாக மலையகத்தைச் சேர்ந்த சிறுமிகளும் பெண்களுமே இவ்விதம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இது குறித்து அரசாங்கம் மட்டுமெல்லாது அந்த மலையக மக்களது இரத்தத்தை உறுஞ்சிக் குடிக்கும் மலையக அரசியல் வாதிகளும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது மிகவும் கொடுமையானதாகும்.


இது இவ்விதம் இருக்க பெண்ணியம் பேசுகின்ற அமைப்புக்கள் இவ்விதம் வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டு பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுகின்ற மலையக பெண்

— ஜீ. யோகப்பிரியா

சமுதாயம் குறித்து ஏன் கவனமெடுப்பதில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இதுவரை அவர்கள் எத்தனை பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்? எத்தனை பெண்களை காப்பாற்றி உள்ளனர்? இவ்விதம் வீடுகளுக்கு பெண்பிள்ளைகளை அனுப்ப வேண்டாமென மலையகத்தில் எத்தனை வேலைத்திட்டங்களை நடத்தியுள்ளனர்? என்ற கேள்விகள் கேட்கத் தோன்றுகின்றன.

எனவே, இனியாவது இதுகுறித்து மலையக அரசியல்வாதிகளும், பெண்ணிய அமைப்புக்களும், களத்தில் இறங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.




## தேர்தல் களம் 2005 மக்கள் கருத்துக்கள் அனுராதபுரம் - வவுனியா




**ஏ. காந்தி**

அப்பாவி ஏழை மக்களின் வறுமை இல்லாதொழிய வேண்டும். அவர்கள் நிறைய துன்பங்களை அனுபவித்துள்ளனர். அதனை இல்லாதொழிக்க வேண்டும். அடுத்தது சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தலைவர்கள் பிரிந்து வேலை செய்வதை நிறுத்தி ஒற்றுமையாக, சகோதரத்துவத்துடன் வேலை செய்வது நல்லது சாதாரண மனிதன் என்ற வகையில் இதனையே கூற வேண்டியுள்ளது.

**ஆர். அசங்க**
**முச்சக்கரவண்டி ஓட்டுனர்**

எங்களுக்கு சமாதானம் வேண்டும். தற்போது சமாதானம் இருப்பதால் தான் சுதந்திரமாக வாழ்கிறோம். சமாதானம் இல்லாமல் போனால் மீண்டும் எமது தொழில்களை செய்ய முடியாமல் போய்விடும். மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தும் ஒரு தலைவரை தெரிவு செய்வது அவசியமாகும்.

**எஸ். குணசோம**

உண்மையில் இது தீர்மானங்களை எடுக்கும் தருணம். அனேகமானவர்கள் நாட்டை பற்றி, இனத்தை பற்றி, மதத்தை பற்றி நினைக்க வேண்டும். 56 இற்கு பின் ஏதேனும் விசேட மாற்றம் ஏற்படும் வாய்ப்பாக இது அமையலாம். சகலருக்கும் சம உரிமை அளிப்பவரை தெரிவு செய்வதே எமது தீர்மானம்.

**எம். அருளானந்தம்**

நாட்டின் ஜனாதிபதி தெரிவில் சமாதானத்தை முன்னெடுக்கும் ஜனாதிபதி தான் எங்களுக்கு தேவை. இவ்வளவு காலம் நாங்கள் போரினால் பாதிக்கப்பட்டு உடைமை இழந்து, உரிமை இழந்து, நாட்டை இழந்து யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு அகதிகளாக தான் வந்திருக்கின்றோம்.

அத்தோடு சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்கக்கூடிய கொள்கைகளைக் கொண்ட ஒரு ஜனாதிபதி தேர்தல் நடக்குமானால் அந்த தேர்தலில் வெற்றிபெற்று நல்ல ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவார் என்று தான் சொல்லாம்.

**ரி. திருக்குமரன்**

மூவின மக்களும் சமாதானம் வரக்கூடிய விதத்தில் ஒழுங்குகளை செய்து யுத்த சூழ்நிலை இல்லாமல் எல்லாமக்களும் சுதந்திரமாக வாழக் கூடிய ஒழுங்கினை செய்வார்களாக இருந்தால் நாங்கள் இந்த தேர்தலை ஆதரிப்போம்.

நாங்கள் இப்போது மூன்று வருடமாக சந்தோஷமாக இருக்கிறோம். யுத்தமில்லாமல் எந்த கெடுபிடிகளும் இல்லாமல் சந்தோஷமாக இருக்கிறோம். திரும்பவும் அதேமாதிரி ஆட்சி வரவேண்டும். அல்லது அதே மாதிரி ஆட்சி அமைக்கக்கூடிய தலைவர் வரவேண்டும்.

**கே. நிமல்**
**முச்சக்கரவண்டி ஓட்டுனர்**

யார் தலைவரானாலும், சமாதானத்தை ஏற்படுத்த புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, அவர்களின் தேவை என்னவென்பதை அறிந்து, நாட்டை பிரிக்காமல் அனைவரும் ஒரே விதமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

**டி. எஸ். ஜயந்த**
**பேருந்து ஓட்டுனர்**

இப்போதுள்ள அரசாங்கமாயினும் எதிர்காலத்தில் வரவிருக்கும் அரசாங்கமாயினும் சமாதானமாக இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் அரசாங்கத்திற்கு நாம் ஆதரவளிப்போம்.

**எஸ். ரமேஷ்**


சமாதானத்தை முன்னெடுக்கக்கூடிய தலைவர் வரவேண்டும் எந்த இனமும் வாழக்கூடிய மாதிரி ஐக்கியத்தை வழியுறுத்துகின்ற தலைவராக இருக்கவேண்டும். வன்முறைகளற்ற தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும்.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# பொறுமையும், விவேகமும் எப்போதும் நன்மை தருவன

ஒவ்வொருவருடைய வாழ்வும் மகிழ்ச்சி தருகின்ற சிறந்த வாழ்வாக அமையும்போது வாழ்க்கை பொருள் உள்ளதாகின்றது. அதா



வது ஞானம் உள்ள வாழ்வாக அமைந்து காணப்படுகிறது. இதுவே சிறந்ததாகும்.

'ஞானம்'என்பது சரியானதை தெரிந்துகொள்வதையே குறிக்கிறது. இறைவன் சாலமோன் மன்னனுக்கு முன்தோன்றி நீ விரும்புவதை கேள் என்றார்.மன்னன் சாலமோன் 'நன்மை, தீமையை பகுத்தறியும் ஞானத்தை எனக்குத் தாரும்'என்று கேட்டான். பணத்தையோ, புகழையோ கேட்காமல் ஞானத்தைப் பெற்றுக்கொண்டான். ஒவ்வொரு மனிதரும் ஞானம் உள்ளவர்களாக வாழ் கின்ற போது அவர்கள் கடவுளுக்கு அருகாமையில் வாழ்கிறார்கள். கடவுளின் அருள்பாலிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஞானத்தின் ஆரம்பம் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருந்தே ஆரம்பமாக வேண்டும்.பெற்றோர்களின் ஞானமே பிள்ளைகளைச் சென்றடையும். குடும்பங்களில் நிலவும் அன்புறவு ஒற்றுமையே ஞானமானது வளர்வதற்கு இடமளிக்கும். ''கடவுளுக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்''என்பதைப் பழமொழி ஆகமம் குறிப்பிடுகின்றது.

### குடும்பத்தில் நற்பண்புகளை வளர்ப்போம்

குடும்பங்களே எல்லாப் புண்ணியங்களும் வளரும் நாற்றுமேடையாக அமைந்துள்ளது. இங்கு சரியான முறையில் வளர்க்கப்படும் பயிர்களே சமூகம் என்ற தோட்டத்தில் நடப்படுகின்றன. நாற்றுமேடையில் பராமரிக்கப்பட்டதன் பலனையே அப்பயிர் விளை திறனாகக் காட்டுகின்றது. பெற்றோர்களின முன்மாதிரிகைகளையே பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். தாரமும் குருவும் தலைவிதியென்று முன்னோர்கள் குறிப்பிடுவார்கள். எமக்கு வாய்க்கப்பெறும் நல்ல பெற்றோர், நல்லாசிரியர்கள்,நல்ல வாழ்க்கைத் துணை என்பவர்களே எமது நல் வாழ்வை தீர்மானிக்கப் போகின்றவர்கள். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்பவை, பெற்றுக் கொள்பவைகளே எம் வாழ்வில் வெளிப்படுபவைகளாக இருக்கின்றன. நல்ல கருவூலத்திலிருந்து பெற்றுக்கொள்பவன் நல்லதைப் பேசி நல்லதையே செய்கின்றான். தீயகருவூலத்திலிருந்து பெறுபவன் எதிராகச் செயற்படுகிறான். எனவே குடும்பங்கள் நற்கருவூலங்கள் அமைந்து விளங்குவது சாலச் சிறந்ததாகும்.

### பிறருக்கு உதவுவதே கடவுளைக் காண வழி

வாழ்க்கையில் விவேகம் என்பது ஞானத்தின் சாயலே. "கீழ்ப்படிதலானது சட்டங்களைக் கடைப்பிடிக்கிறது. அன்பு எப்போது அவற்றை மீறுவதென்றும் அறிந்திருக்கிறது'' என்று அன்ரனி டி மெல் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். கடவுளை நாம் அறிந்தவர்களாக செயற்பட வேண்டும். கடவுளை விரைவாக அறியவழி பிறருக்கு உதவி செய்வதாகும். அவர்களின் தேவையை நிறைவு செய்ய உதவுவதாகும். ஆலயங்களைத் தரிசிப்பதாலோ, நேர்த்திக் கடன்களைச் செய்வதாலோ இறைவனை இலகுவாக அறிந்துகொள்ள முடியாது. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நாமெல்லாம் நெய்க்கு அலைகின்றோம்.அயலில் ஆண்டவனை வைத்துக்கொண்டு ஆலயங்களில் தேடி அலைகின்றோம். "சின்னஞ் சிறிய உன் சகோதரனுக்கு நீ எவற்றை செய்த போதெல்லாம் எனக்கே செய்தாய்'' என்று இயேசுபெருமான் தானே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

### பொறுமையும் விவேகத்தையும் கடைப்பிடிப்போம்

ஆத்திரப்படுவதாலோ அவதிப்படுவதாலோ நாம் எதையும் சாதித்து விடலாம் என்று பலவேளையில் செயற்படுகின்றோம். பலவேளை யில் அது ஆபத்திலே போய் முடிந்து விடுகின்றது.ஆறஅமர இருந்து சிந்தித்துச் செயற்படுவதனாலே நிறைந்த பயன்பெற்றிருப்பதையும் அறிந்திருக்கின்றோம்.விவேகமாக விளக்கில் எண்ணெய எடுத்துச் சென்ற கன்னியர் மணவாளனைக் கண்டடைந்தார்கள். விவேகமின்றிச் செயற்பட்டவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளானார்கள். எனவே பொறுமையும், விவேகமும் எக் காலத்திலும் நன்மையே பயப்பனவாகும். நன்மைத் தனங்கள் எல்லாம் நல்லாலோசனைகளின் பின்பே பெறப்படுவனவாகும். இயேசுபெருமானின் வாழ்வு எமக்கு ஞானத்தை வெளிப்படுத்தும் வாழ்வாகத் தரப்பட்டுள்ளது. அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி எம் வாழ்வில் ஞானத்தை அடைந்து கொள்வோம்.இறை ஆசீரைப் பெற்றுக்கொள்வோம். □

பரமபிதாகாட்டிய பாதை

அன்ரனி பீற்றர்

## 15ஆம் திகதி நள்ளிரவுடன்
## தேர்தல் அலுவலகங்களை அகற்ற உத்தரவு

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்திற்கு 500மீற்றர் தூரத்திற்குள் இருக்கும் அனைத்துக் கட்சி அலுவலகங்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி நள்ளிரவுடன் அகற்றுமாறு பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

கட்சி அலுவலகங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் தேர்தல் செயலகப் பிரிவு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

தேர்தல் சட்டத்திற்கமைய வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்களிப்பு நாளில் 500மீற்றர் தூரத்திற்குள் தேர்தல் அலுவலகம் அமைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. (ந-4)

## வடக்கின் வாக்கு பலத்தை விட தெற்கின் வாக்கு பலம் அதிகம்

-மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

தெற்கில் உருவாகப்போகும் ஜனாதிபதி ஒருவர் குறித்து மக்கள் அவதானத்துடன் இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தளையில் நடைபெற்ற பிரசாரக் கூட்ட மொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கின் வாக்குபலத்தை விட தெற்கின் வாக்கு பலம் அதிகமாக இருக்கின்றது. எனது வெற்றி இந் நாட்டின் வெற்றி. பிளவுபடாத நாடு ஒன்றின் வெற்றி என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகின்றேன்.சகோதர, சகோதரிகளே நீங்கள் என்னிடம் ஒப்படைக்கும் பொறுப்பை அக்கறையுடன் கவனத்தில் எடுத்துள்ளேன்.இன்று முழுநாடும் தெற்கை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதிக்காக தெற்கு மக்கள எந்தவிதத்தில் செயற்படுகின்றார்கள் என்பதை அனைவரும் பார்க்கின்றார்கள். இன்று சிலர் வடக்கில் வாக்குகளை வெல்வதற்காக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் கூறுகின்றோம், தெளிவாகக் கூறுகின்றோம் வடக்கின் வாக்குகளை விட தெற்கின் வாக்குகள்தான் பலமானவை என்று அங்குஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## மேர்வின் சில்வாவின் மகனின் கடவுச்சீட்டு 3 வாரத்திற்கு விடுவிப்பு

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக சில்வாவின் கடவுச்சீட்டினை 3 வார காலத்திற்கு விடுவிக்குமாறு மேல்நீதிமன்ற நீதிபதி ரோகிணி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர் ஒருவரையும் பொலிஸ் உறுப்பினர் ஒருவரையும் தாக்கியதாக மாலக சில்வா மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவ் வழக்கின் விசாரணை கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது தமது கடவுச்சீட்டை விடுவிக்கக் கோரி மாலக சில்வா மனுத்தாக்கல் செய்தார். இதையடுத்து 3 வார காலம் அவரது கடவுச்சீட்டு விடுவிக்கப்பட்டது.

தான் சுகவீனமுற்றிருப்பதனால் விசாரணைக்கு வரஇயலவில்லை என்று வைத்திய அறிக்கையொன்றையும் நீதிமன்றத்திற்கு அவர் சமர்ப்பித்திருந்தார். அடுத்த விசாரணைக்கு முன்னிலையாகவில்லையெனில் வழக்கு விசாரணை முடியும் வரை அவர் விளக்கமறியலில இருக்க வேண்டும்என்று நீதிபதி எச்சரித்தார்.

வழக்கின் விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## இராசி பலன்

06.11.2005
(ஐப்பசி 20, ஞாயிற்றுக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 1.41மணிவரை
மூலம் பிற்பகல் 1.46 மணி வரை
இராகுகாலம்-4.35-6.05 மணிவரை
சுபநேரம்-9.05-10.35 மணிவரை
ஸ்கந்த பஞ்சமி
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, உறவினர் சந்திப்பு,உடல்நலக் குறைவு. |
| இடபம் | அபகீர்த்தி,காரிய தாமதம்,திடீர் நன்மை, வீண்பகை. |
| மிதுனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு,களஸ்திர நன்மை, தெய்வதரிசனம், முயற்சி கைகூடும். |
| கடகம் | புதிய முயற்சி, சுவாரஸ்யம்,நல்ல செய்தி, விருந்துபசாரம். |
| சிங்கம் | ரோகநிலை,பெரியோர் சந்திப்பு,தொழில் சிந்தை, அமைதிக்குறைவு. |
| கன்னி | புதிய விடயம், அதிக வார்த்தை,சுப செலவு, எடுத்தகாரியம் தாமதமாகும். |
| துலாம் | தொழில் சிந்தை,கல்வியில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு,காரிய அனுகூலம் |
| விருச்சிகம் | செல்வாக்கு குறைவு, வீண்பகை,முயற்சி தாமதம், தனவிரயம். |
| தனுசு | கற்பனைமிகுதி,தெய்வதரிசனம்,பெரியோர் உதவி, முயற்சி கைகூடும். |
| மகரம் | உடல்நலக் குறைவு, காரிய தாமதம், பணவிரயம், நித்திரைக் குறைவு. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும்,தனவருவாய், நல்லதகவல்,உறவினர் வருகை. |
| மீனம் | கடின முயற்சி, களஸ்திரநன்மை,தெய்வ தரிசனம்,போசனசுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## சிறு விளம்பரம்

### திருத்துதல்

முக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெராக்கள் எலக்ரோனிக் பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்கமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல் போன்றவை விஷேசமாக செய் யப்படும். ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் :மேல்மாடி தொடர்பு: சு.நாராயணசாமி. (9966)

### சைவநெறித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் சைவநெறித் தேர்வு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத் தேர்வுக்குரிய சுட்டிலக்கம், இணைப்பிரதி விவரம் என்பன தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இவை கிடைக்கப்பெறாதோரை காரியாலயத்தில் தொடர்புகொள்ளுமாறு தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (ந)

### நியமனம்

(ஊரெழு)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மீண்பிடியியல் கற்கை நெறியை கற்பிக்க ஆசிரியர் இல்லாத பாடசாலைகளில் இக் கற்கை நெறியைப் போதிப்பதற்கு மீண்பிடியியல் கற்கைநெறியினை முடித்து வேலைகிடைக்காமல் இருந்தோரில் 15 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள் ளனர்.

தமிழீழக் கல்விக்கழகம் யாழ். வலய கல்விக்கழகத்துடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. (ந-25)

### போட்டிகள்

(மருதங்கேணி)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 126ஆவது குருபூசைத் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9மணிக்கு வண்/நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு,மேற்பிரிவு என மூன்று பிரிவாக நடாத்தப்படும். (ந-35)

### பற்சிகிச்சை

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம்3,4,7ஐச் சேர்ந்த 46 மாணவர்களுக்கு கோண்டாவில் மத்திய மருந்தக பற்சிகிச்சை கூடத்தில் கடந்த புதன்கிழமை பற்சிகிச்சை அளிக்கப்பட்டது.

மாணவர்களின் பற்சுகாதாரத்தை மேம்படுத்துவதன் பொட்டு பற்சொத்தை,பற் சிதைவு ஆகியவற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. (து-36)

## சஷ்டியை நினைப்போம்



குமாரா என்ற கோவே போற்றி
பேருருக் கொண்ட பிரானே போற்றி
அகத்திர்க் கருளும் அண்ணலே போற்றி
சிவனார் கண்வரு சேயே போற்றி
குருவாய் நின்ற குகனே போற்றி

கந்தா கருணைக் கடலே போற்றி
கற்பனைக் கடந்த கந்தனே போற்றி
வினைகள் தீர்க்கும் வீரனே போற்றி
வாரணம் ஊர்ந்த வள்ளலே போற்றி
குமர குருபரன் குருவே போற்றி

துடிக்கூத் தாடிய தோன்றலே போற்றி
சென்னி மலைவாழ் சேயே போற்றி
சுப்பிரமணிய சுவாமியே போற்றி
குறிஞ்சி நிலத்துக் கோவே போற்றி
ஈடெதிர் இலாத ஈசனே போற்றி

சாமி நாத சுவாமியே போற்றி
அத்துவ மூர்த்தி ஐயனே போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
பாச பந்தங்களை பறிப்பாய் போற்றி
என்றும் இளையாய் எழிலாய் போற்றி

நன்றி: அண்ணா தொழிலகம்

(தொடரும்)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

6

# டெஸ்ட் கிரிக்கெற் போட்டி

## அதிகூடிய மொத்த (தனிநபர்) ஓட்டங்கள்

| | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | அதிகூடிய ஓட்டம் | சதம் | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| அலன் போர்டர் (அவுஸ்) | 156 | 265 | 11174 | 205 | 27 | 50.56 |
| ஸ்ரீவ் வோவ் (அவுஸ்) | 168 | 260 | 10927 | 200 | 32 | 51.06 |
| பிறைன் லாரா (மேற்இந்) | 118 | 208 | 10859 | 400* | 30 | 53.75 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 123 | 198 | 10134 | 248* | 34 | 57.25 |
| சுனில் கவாஸ்கர் (இந்) | 125 | 214 | 10122 | 236* | 34 | 51.12 |
| ஜி.கொக் (இங்) | 118 | 215 | 8900 | 333 | 20 | 42.58 |
| ஜாவிட் மியாண்டட் (பாக்) | 124 | 189 | 8832 | 280* | 23 | 52.57 |
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற்இந்) | 121 | 182 | 8540 | 291 | 24 | 50.23 |
| அலெக்ஸ் ஸ்ரூவேர்ட் (இங்) | 133 | 235 | 8463 | 190 | 15 | 39.54 |
| டி.கவர் (இங்) | 117 | 204 | 8231 | 215 | 18 | 44.25 |
| ஜி.போய் கொட் (இங்) | 108 | 193 | 8114 | 246* | 22 | 47.72 |
| கெரி சோபர்ஸ் (மேற் இந்) | 93 | 160 | 8032 | 365 | 26 | 57.78 |
| மார்க் வோவ் (அவுஸ்) | 128 | 209 | 8029 | 153* | 20 | 41.81 |
| ராகுல் ராவிட் (இந்) | 92 | 155 | 7894 | 270 | 20 | 57.62 |
| மைக்கல் அதெட்டன் (இங்) | 115 | 212 | 7728 | 185* | 16 | 37.69 |
| எம்.கௌட்றி (இங்) | 114 | 188 | 7624 | 182 | 22 | 44.06 |
| இன்சமாம் – உல் – ஹக் (பாக்) | 102 | 170 | 7621 | 329 | 22 | 50.13 |
| சி.கிறினிட்ஜ் (மேற்கிந்) | 108 | 185 | 7558 | 226 | 19 | 44.72 |
| மார்க் ரெய்லர் (அவுஸ்) | 104 | 186 | 7525 | 334* | 19 | 43.49 |
| கிளைவ் லொயிட் (மேற்இந்) | 110 | 175 | 7515 | 242 | 19 | 46.67 |

## ஒரு இனிங்ஸில் பெறப்பட்ட அதிகூடிய (தனிநபர்) ஓட்டம்



பிறைன் லாரா(மேற்கிந்) -400* எதிர் இங்கிலாந்து 2003/04
மத்தியூ கெய்டின்(அவுஸ்) -380 எதிர் சிம்பாப்வே 2003/04
பிறைன் லாரா(மேற்கிந்) -375 எதிர் இங்கிலாந்து 1993/94
கெரி சோபர்ஸ்(மேற்கிந்) -365 எதிர் பாகிஸ்தான் 1957/58
எல்.கட்டன்(இங்) -364 எதிர் அவுஸ்திரேலியா 1938
சனத் ஜெயசூரியா(இல) -340 எதிர் இந்தியா 1997
ஹனிவ் முஹமட்(பாக்) -337 எதிர் மேற்கிந்தியா 1957/58
டபிள்யூ. ஹமொண்ட் (இங்)-336* எதிர் நியூஸிலாந்து 1932/33
மார்க் ரெய்லர்(அவுஸ்) -334* எதிர் பாகிஸ்தான் 1998/99
டொன் பிரட்மன்(அவுஸ்) -334 எதிர் இங்கிலாந்து 1930
ஜி.கொக்(இங்) -333 எதிர் இந்தியா 1990
இன்சமாம் – உல்–ஹக்(பாக்) -329எதிர் நியூஸிலாந்து 2002
ஏ.சாண்ட்ஹம்(இங்) -325 எதிர் மேற்கிந்தியா 1929/30
கிறிஸ் கெய்ல் (மேற்கிந்) -317எதிர் தென்னாபிரிக்கா 2004/05
ஆர்.சிம்ப்சொன் (அவுஸ்) - 311 எதிர் இங்கிலாந்து 1964
ஜே.எட்ஹிச் (இங்) - 310* எதிர் நியூஸிலாந்து1965
விரேந்தர் சேவாக்(இந்) -309 எதிர் பாகிஸ்தான் 2003/04
டொன் பிரட்மன்(அவுஸ்) -304 எதிர் இங்கிலாந்து 1934
எல்.ஹொவ் -302(மேற்கிந்) எதிர் இங்கிலாந்து 1973/74

## அதிகூடிய போட்டியில் விளையாடியவர்கள்

ஸ்ரீவ் வோவ் (அவுஸ்-1985/86) - 168
அலன் போர்டர் (அவுஸ்-1978/79) - 156
அலெக்ஸ் ஸ்ரூவேர்ட் (இங்-1989/90) - 133
கொட்னி வோல்ஸ் (மேற்கிந்-1984/85) - 132
கபில் தேவ் (இந்-1978/79) - 131
ஷேன் வோர்ண் (அவுஸ்-1991/92) - 129
மார்க் வோவ் (அவுஸ்-1990/91) - 128
சுனில் கவாஸ்கர் (இந்-1970/71) - 125
ஜாவிட் மியாண்டட் (பாக்-1976/77) -124
சச்சின் டெண்டுல்கர் (இந்-1989/90) - 123
விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற்திந்-1974/75) -121
லான் கீலி (அவுஸ்-1988/89) - 119
ஜி.கொக் (இங்-1975) - 118
பிறைன் லாரா (மேற்கிந்-1990/91) - 118
டி.கவர் (இங்-1978) - 117
டி.வெங்சர்கர் (இந்-1975/76) - 116
மைக்கல் அதெட்டன் (இங்-1989) -115

## அதிகூடிய சதம் பெற்றவர்கள்

சுனில் கவாஸ்கர் (இந்) - 34
சச்சின் டெண்டுல்கர் (இந்) - 34
ஸ்ரீவ் வோவ் (அவுஸ்) - 32
பிறைன் லாரா (மேற் இந்) - 30
டொன் பிரட்மன் (அவுஸ்) - 29
அலன் போர்டர் (அவுஸ்) - 27
கெரி சோபர்ஸ் (மேற் இந்) - 26
விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்) - 24
ஜி.சப்பல் (அவுஸ்) - 24
ஜாவிட் மியாண்டட் (பாக்) - 23
றிக்கி பொண்டிங் (அவுஸ்) - 23
ஜி.போய்கொட் (இங்) - 22
எம்.கௌட்றி (இங்) - 22
இன்சமாம் – உல் – ஹக் (பாக்) - 22
ஜக் கலிஸ் (தென் ஆபி) - 22
டபிள்யூ ஹமொண்ட் (இங்) - 22
மத்தியூ கெய்டின் (அவுஸ்) - 22
முகமட் அஷாருதின் (இந்) - 22
டேவிட் பூண் (அவுஸ்) - 21



## ‘மன்னாதிமன்னன்’ (அலன் போர்டர்)

முழுப்பெயர் :- அலன் றொபேர்ட் போர்டர்
பிறப்பு :- ஜுலை 27, 1955 - சிட்னி
வயது :- 50 (101 நாட்கள்)
துடுப்பாட்டம் :- இடதுகை
பந்து வீச்சு:- இடது கை மிதவேகம்
டெஸ்ட் அறிமுகம் :- எதிர் இங்கிலாந்து (மெல்பேர்ண் -டிசம்பர் 29, 1978 - ஜனவரி 3, 1979)
டெஸ்ட் போட்டி :- 156
இனிங்ஸ் :- 265
ஓட்டம் :- 11174 (50.56)
அதிகூடிய ஓட்டம் :- 205
சதம் :-27
அரைச்சதம் :- 63
விக்கெற் :- 39 (39.10)
ஒருநாள் அறிமுகம் :- எதிர் (இங்கிலாந்து சிட்னி ஜனவரி 13, 1979)
ஒருநாள் போட்டி :- 273
ஓட்டம் :- 6524 (30.62)
அதிகூடிய ஓட்டம் :- 127*
சதம் :- 3
அரைச்சதம் :- 39

## நோயல்

## ‘கதாநாயகன்’ (ஸ்ரீவ் வோவ்)



முழுப்பெயர் :- ஸ்ரீபன் றொட்ஜெர் வோவ்
பிறப்பு :- ஜுன் 2, 1965 - சிட்னி
வயது :- 40 (156 நாட்கள்)
துடுப்பாட்டம் :- வலது கை
பந்து வீச்சு :- வலது கை மித வேகம்
டெஸ்ட் அறிமுகம்:- எதிர் இந்தியா (மெல்பேர்ண டிசம்பர் 26 -30, 1985)
டெஸ்ட் போட்டி :- 168
இனிங்ஸ் :- 260
ஓட்டம் :- 10927 (48.64)
அதிகூடிய ஓட்டம் :- 200
சதம் :-32
அரைச்சதம் :- 50
விக்கெற் :- 92 (37.44)
ஒருநாள் அறிமுகம் :- எதிர் நியூஸிலாந்து (மெல்பேர்ண் ஜனவரி 9, 1986)
ஒருநாள் போட்டி :- 325
ஓட்டம் :- 7569 (32.90)
அதிகூடிய் ஓட்டம் :- 120*
சதம் :- 3
அரைச்சதம் :-45
விக்கெற் :- 195 (34.67)

## சிறந்த துடுப்பாட்ட வேகவிகிதம் (ஆயிரம் ஓட்டங்களுக்கு)




| | துடுப்பாட்ட வேகவிகிதம் | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | சராசரி |
|---|---|---|---|---|---|
| அடம்ஸ் கில்கிறிஸ்ற் (அவுஸ்) | 82.75 | 74 | 108 | 4728 | 52.53 |
| கபில் தேவ் (இந்) | 79.33 | 131 | 184 | 5248 | 31.05 |
| சகிட் அப்ரிடி (பாக்) | 78.71 | 19 | 35 | 1198 | 35.23 |
| விரேந்தர் சேவாக் (இந்) | 73.56 | 37 | 61 | 3264 | 55.32 |
| முத்தையா முரளிதரன் (இல) | 69.63 | 96 | 123 | 1025 | 12.81 |
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற இந்) | 68.83 | 121 | 182 | 8540 | 50.23 |
| அன்ரூ பிளின்ரொவ் (இங்) | 67.90 | 53 | 54 | 2691 | 33.22 |
| சனத் ஜெயசூரியா (இல) | 64.81 | 100 | 170 | 6580 | 42.17 |
| டி.சிமித் (நியூ) | 63.17 | 63 | 88 | 1815 | 25.56 |
| எஸ்.பற்றில் (இந்) | 62.38 | 29 | 47 | 1588 | 36.93 |

## தற்போதைய நிலவரம் (03.11.2005 வரை)

### ஒருநாள் தரவரிசைப் பட்டியல்

| அணி | போட்டிகள் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 27 | 3672 | 136 |
| தென்னாபிரிக்கா | 22 | 2609 | 119 |
| பாகிஸ்தான் | 29 | 3363 | 116 |
| இலங்கை | 25 | 2776 | 111 |
| நியூஸிலாந்து | 24 | 2636 | 110 |
| இங்கிலாந்து | 22 | 2389 | 109 |
| இந்தியா | 33 | 3481 | 105 |
| மேற்கிந்தியா | 22 | 1980 | 90 |
| சிம்பாப்வே | 23 | 1012 | 44 |
| பங்களாதேஷ் | 23 | 322 | 14 |



வெற்றிக் களிப்பில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் றிக்கி பொண்டிங்.

(அடுத்த வாரம் தொடரும்...)

# 9 நாட்களாக பாரிஸில் தொடர்கிறது கலவரம்

## பெரும் பதற்றம்; சுற்றுலாப்பயணிகள் வெளியேற்றம்




(பாரிஸ்)

பிரான்ஸில் 9வது நாளாகவும் தொடரும் கலவரத்தால் அங்கு பெரும் பதற்றம் தோன்றியுள்ளது. ஒரே நாளில் 300 கார்கள் தீயிட்டுக கொளுத்தப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில புறநகர்ப் பகுதியில் ஆபிரிக்க நாடுகளைச சேர்ந்தவர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் இதர சலுகைகள் மறுக்கப்படுவதாக ஆபிரிக்க இளைஞர்கள் போராட்டம் நடத்தினர்.

பாரிஸ் நகரில் போராட்டம் நடத்திய ஆபிரிக்க இளைஞர்களை பொலிஸார் தடியடி நடத்தி விரட்டியபோது இரண்டு இளைஞர்கள் பலியானார்கள். இதைத் தொடர்ந்து அங்கு மோதல் மேலும் தீவிரமானது. 9வது நாளாக நேற்றும் கலவரம் நீடித்தது. ஆபிரிக்க இளைஞர்களுக்கும் மற்ற சமூகத்தினருக்கிடையேயும மோதல் வெடித்தது.

பாரிஸ் நகரில் ஏற்பட்ட இந்தக் கலவரம் மற்ற நகரங்களுக்கும் பரவத் தொடங்கியுள்ளது. பாரிஸ் நகரில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 300 கார்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்ட அதேவேளை, நேற்று 130 வாகனங்களும் கடைகள், வீடுகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

பாரிஸ் நகரம் எரிகிறது. அங்கு குவிந்த சுற்றுலாப் பயணிகள் அவசர அவசரமாக நகரை விட்டு வெளியேறி வருகின்றனர்.

கலவரம் தொடர்பாக இதுவரை 143 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ற)



அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ்-கமீலா தம்பதியினருக்கு வோஷிங்டனில உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் நேற்றுமுன்தினம தூதுவர் சேர் டேவிட் மனிங் விருந்துபசாரம் அளித்தார்.
இதில் கலந்து கொள்ளச் சென்ற சார்லஸ் -கமீலா...



உஷார்... அமெரிக்காவில் அடுத்தடுத்து வீசிய சூறாவளியால் மக்கள் உஷாராகி பாதுகாப்பான இடங்களில் குடியேறி வருகின்றனர். டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் கடந்த வாரம் 4 குட்டிகளை ஈன்றெடுத்த 'பெண்சி' என்ற சிங்கம், சூறாவளி பீதியில் தனது குட்டியை வாயில் கவ்விக் கொண்டு இடம்பெயர ரெடியாகி விட்டது போலும். அமெரிக்காவில் மக்கள் மட்டுமல்ல விலங்கினங்களும் உஷாராகத்தான் இருக்கின்றன.

# பெரு - சிலி நாடுகள் போருக்கு தயாராகின்றன

(லிமா)

பெரு-சிலி நாடுகளுக்கிடையே கடல் எல்லைத் தகராறு முற்றுவதால் இருநாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் அதிகரித்து வருகிறது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளான பெரு மற்றும் சிலி நாடுகளுக்கிடையே நீண்ட நாட்களாக கடல் எல்லைத் தகராறு இருந்து வருகிறது. பசுபிக் கடல் உள்ள 37ஆயிரத்து 900 சதுர கி.மீ பரப்பளவு பகுதி இப்போது சிலி நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது மீன்வளம் நிறைந்த பகுதி.

WORLD NEWS உலக தரிசனம்

1950 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தப்படி தான் இந்தப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக சிலி நாடு கூறுகிறது.

ஆனால்,இந்தப் பகுதி இப்போது மீண்டும் தங்களுக்கு சொந்தமாகிவிட்டது என்று பெருநாடு கூறுகிறது.இந்தக் கடல் பகுதியை மீட்கவேண்டுமென்று பெருநாட்டுப் பாராளுமன்றத்திலும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

எங்கள் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம்.இந்தத் தீர்மானம் சட்ட விரோதமானது என்று சிலி கூறுகிறது. இந்தத் தகராறு காரணமாக இரு நாடுகளுக்குமிடையே போர் மூளும் அபாயம் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே 19ஆம் நூற்றாண்டிலிருந்தே இரு நாடுகளுக்குமிடையே எல்லைத் தகராறு இருந்து வருகிறது. 1879 முதல் 1883ஆம் ஆண்டுவரை நடந்த போரில் பெரு நாட்டின் சில பகுதிகளை சிலி நாடு பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 2006 இல் விண்வெளிக்குப் பயணம்

# விண்வெளிக்கு செல்லும் 4-வது சுற்றுலாப் பயணி

(டோக்கியோ)

அமெரிக்கா,ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தை அமைத்துளளன.

இந்த ஆய்வுகூடத்துக்கு அவ்வப்போது ராக்கெட்டில் விண்வெளி நிபுணர்களையும் தேவையான தளபாடங்களையும் அனுப்பி வருகிறார்கள்.

இந்த ஆய்வுகூடப் பணிகளுக்கு ஆகும செலவுகளை சமாளிக்க அவ்வப் போது ராக்கெட் செல்லும் போது சுற்றுலாப் பயணிகளும் கூடவே அழைத்துச் செல்லப் படுகினறனர்.கோடிக்கணக்கில் இதற்காக அந்த விண்வெளி சுறறுலாப் பயணிகளிடம் இருந்து பணம் வசூலிக்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் உட்பட இதுவரை மூன்று சுற்றுலாப் பயணிகள் விண்வெளிக்கு அழைத்துச செல்லப்பட்டுள்ளனர்.

விண்வெளிக்குச் செல்ல இருக்கும் 4 வது சுற்றுலாப்பயணி 34வயதுடைய ஒரு ஜப்பானியர். ஓவியரான இந்தக் கோடீஸ்வரர் பெயர் டெய்சூகி எனோமோட்டோ. இதற்காக இவர் இரண்டு கோடி டொலர் பணம் கொடுக்கிறார்.

அடுத்த ஆண்டு சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்துக்கு ராக்கெட் செல்லும் போது விண்வெளி நிபுணர்களுடன் இவரும் உடன் செல்லவுள்ளார். (ற)



வேலை செய்யும் இடங்களில் தொழிலாளர்கள் அடிமை போல் நடத்தப்படுவதைக கண்டித்து தைவான் நாட்டின்தலைநகர் தைபேயில்நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்திய வெளிநாடுகளைச்சேர்ந்த தொழிலாளர்கள்...

# பிளன் கெட்டுக்கு பதிலாக புதிய அமைச்சர்

(இலண்டன்)

பிரிட்டனில் நேற்று முன்தினம் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த டேவிட் பிளன் கெட்டுக்கு பதிலாக புதிய அமைச்சராக ஜான்கட்டன் என்பவரை பிரதமர் ரொனி பிளேயர் நியமித்துள்ளார்.

பிரிட்டனில் ஓய்வூதியத்துறை அமைச்சராக இருந்த டேவிட் பிளன்கெட் கடும் நெருக்கடி காரணமாக கடந்த வியாழக் கிழமை தனது பதவியை இராஜினாமா செய்தார். இவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவது இது இரண்டாவது முறை.

ஓராண்டுக்கு முன்பு இவர் மீது செக்ஸ் மற்றும் அதிகார துஷ்பிரயோக புகார் கூறப்பட்டதால் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.6 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அமைச்சரானார்.அமைச்சராக இல்லாத போது இவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றினார். இதற்கான சட்ட விதிமுறைகளை அவர் சரியாகக் கடைப்பிடிக்காததால் எதிர்க்கட்சிகள் கடும் நெருக்கடி கொடுத்தன.இதையடுத்து இரண்டாவது முறையாக பதவியை இராஜினாமா செய்தார்.

தனது ஆதரவாளரான பிளன் கெட் பதவி விலகியது பிரதமர் ரொனி பிளேயருக்கு கடும் தர்மசங்கடத்தை உருவாக்கியது. இதையடுத்து தனது மற்றொரு ஆதரவாளரான ஜான்கட்டனை புதிய ஓய்வூதியத்துறை அமைச்சராக ரொனி பிளேயர் நேற்று முன்தினம் நியமித்தார். ஜான்கட்டன் இதற்குமுன் உள்ளாட்சி தொடர்பான பணியில் இருந்தார். தற்போது முக்கிய துறைக்கு பொறுப்பேற்றுள்ளார்.

இதுகுறித்து ஜான்கட்டன் கூறுகையில, 'எனது பணி என்ன என்பதை பிரதமர் ரொனி பிளேயர் தெளிவுபடுத்திவிட்டார். ஓய்வூதியத்துறையில் தீவிர சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என அவர் விருப்பப்படுகிறார் அது கண்டிப்பாக நிறைவேறறப்படும்'என்றார். (ற)



நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாமுக்கு மலர்ச்செண்டு கொடுத்து ரம்ழான் வாழ்த்துத் தெரிவிக்கும் பிஞ்சு



'வேட்டை'
ஆகாஷ் – சாவ்லா

## முறுக்கு மீசை சத்யராஜ்

'வால்டர் வெற்றிவேல்' படத்தில் பொலிஸ் அதிகாரியாக வந்து தூள் பறத்திய சத்யராஜ் மீண்டும் பொலிஸ் அதிகாரியாக நடித்து மிரட்ட இருக்கும் படம் 'சிவலிங்கம் ஐ.பி.எஸ்.'

இந்தப் படத்தில் தோரணையான பொலிஸ் அதிகாரியாக நடிக்க சத்யராஜ் தன்னைத் தயார்படுத்தி வருகிறார். அதற்காக முறுக்கு மீசையும் வளர்க்கிறார்.

*'கூத்தாடி' படத்தின் மூலம் வினிதா மீண்டும் திரை உலகுக்கு வருகிறாா.*

# சினிமாச் சிதறல்

விக்ரமின் அடுத்த படத்தை லிங்குசாமி இயக்குகிறார். இவர் சொன்ன கதைக்கு விக்ரம் 'ஓகே' சொல்லி இருக்கிறார்.

* * *

*நீண்டகாலமாக திரைப் படங்களில் தலைகாட்டாமல் இருந்த தாமு 'தொடாமலே' படத்தில் நடிக்கிறார்.*

## விவரமான வடிவேலு



'வீரண்ணா' படத்தில் நெப்போலியன் தந்தை- மகனாக இரட்டை வேடங்களில் நடிக்கிறார். இந்தப் படத்தில் வடிவேலுவும் நடிக்க வேண்டும் என்று நெப்போலியன் கேட்டுக்கொண்டார். வசனம் கொடுக்கப்பட்டது.

அதைப் பார்த்த வடிவேலு வசனத்தில் அரசியல் வாடை வீசவே... 'ஆளைவிடுங் கண்ணே' என்று படத்தில் இருந்து விலகிவிட முடிவு செய்தார். ஆனால் நெப்போலியன் விடவில்லை.

'உங்க விருப்பப்படி நடியுங்க' என்று சுதந்திரம் கொடுத்தார். இதனால் சிரிப்பு வெடி ஒலிக்க தனியாக காமெடி தயாரித்து 'வீரண்ணா'வில் நடித்து வருகிறார் விவரமான வடிவேலு.

'கஜினி' பட இயக்குனர் முருகதாஸ், 'என் படங்களின் வேகத்தை குறைத்துவிடும் என்பதால் காமெடி காட்சிகளை வைப்பதில்லை' என்கிறார்.

* * *

*'ஜெர்ரி' படத்தில் 'ஜித்தன்' ரமேஷுடன் சுருதி, மீராவாசுதேவன், மும்தாஜ் ஆகியோர் நடிக்கிறார்கள்.*

* * *

சிபிராஜ் நடிக்கும் புதிய படத்துக்கு 'வைத்தஸ்வரன்' என்று பெயர் வைத்து இருக்கிறார்கள்.



'பம்பரக்கண்ணாலே'
ஸ்ரீகாந்த் – ஆர்த்தி அகர்வால்



'கலாபக் காதலன்'
ஆர்யா – ரேணுகா மேனன்

## தமிழில் நழுவிய சூப்பர் வாய்ப்பு தெலுங்கில் பிடித்தார் திரிஷா



தமிழில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் நடிக்கும் வாய்ப்பு கைநழுவியதால் தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியுடன் ஜோடியாக ஒப்பந்தம் ஆகி இருக்கிறார் நடிகை திரிஷா.

தெலுங்கில் நம்பர்-1 இடத்தைப் பிடிப்பதில் நீயா, நானா? என்று திரிஷாவுக்கும், ஸ்ரேயாவுக்கும் கடும் போட்டி நடந்துகொண்டிருக்கிறது. எத்தனை படங்களில் நடித்துககொண்டிருந்தாலும் 'சிவாஜி' படத்தில் ரஜினியுடன் நடிக்க வாய்ப்பு வந்தால் கால்ஷீட் கொடுப்பேன் என்று கூறி அதற்காகவே மாதத்தில் இத்தனை நாள் என்று திகதி ஒதுக்கி வைத்திருந்தார் திரிஷா. நடந்ததோ வேறு?

திரிஷாவுடன் தெலுங்கில் மல்லுக்கட்டும் ஸ்ரேயா ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பை தட்டிச்சென்றார். தெலுங்குப் படம் பக்கம் சுமார் 8 மாதத்துக்கு திரும்பிப் பார்க்க முடியாத அளவுக்கு 150 நாட்களுக்கும் மேலான திகதியை டைரக்டர் ஷங்கரிடம் அள்ளிக்கொடுத்திருக்கிறார் ஸ்ரேயா.

நம்பர் -1 இடத்தைப் எப்போது பிடிப்பது என்று காததுக்கொணடிருந்த திரிஷாவுக்கு சரியான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒரு கதவை அடைத்தால் மறுகதவை ஆண்டவன் திறப்பான் என்பது போல் தமிழில் சூப்பர் ஸ்டார் கதவு மூடப்பட்டாலும் தெலுங்கில் சிரஞ்சீவியுடன் நடிக்க திரிஷாவுக்கு வாய்ப்பு வந்தது. விடுவாரா? உடனே ஓ.கே. சொல்லிவிட்டார்.'ஸ்டாலின்' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்குகிறார்.

## சிவகாசி

### திரை விமர்சனம்



குடும்பச் சொத்தை அபகரித்து தாயையும் தங்கையும் கொடுமைப் படுத்தும் அண்ணனை அடக்கி தாயையும் தங்கையையும் மகிழ்ச்சியுடன் வாழ வைக்கும் இளைஞனின் கதை.

இளம் வயதில் அண்ணன் செய்த தவறு தன் மீது விழுந்ததால் தண்டனை பெறு
வீட்டை விட்டு வெளியேறும் அவன் சென்
வைக்கிறான். தனது பெயர் சிவகாசி என்

அங்கு அவனுடன் மோதும் ரவுடிகள்
களிடம் தான் அனாதை என்கிறான்...
கையில் ஒரு கல்லூரி மாணவி குறு
கொடுக்க அவளுடைய குடும்பத்தில் சம்

சிவகாசிக்கும் அவனது காதலிக்கும்
போது அவள் 'நீ அனாதை தானே பாச
தெரியும்' என்று கூற அவன் உணர்ச்சி வ
தங்கை, அண்ணன் இருக்கிறார்கள்' எ
னால் குடும்பத்துடன் வந்து பெண் கே
சிவகாசி ஊர் திரும்புகிறான்.

அங்கு அவனது அண்ணன் உடைய
கிறான். தாய் ஆதரவில்லாமல் வேதனை
ஏழ்மையில் வாழ்க்கையை நடத்துகிற
சிவகாசி ஆவேசப்படுகிறான். அண்ணனை
மீட்டு தாய் தங்கையை வாழ
கைப்பிடிக்க அவன் என்ன
மீதிக் கதை.

சிவகாசியாக விஜய்
டரை' வெல்டி மூலம் வ
இருந்து வெளியேறுவதி
கரகோஷம் அவர் வரும் ஒ
கிறது.

ஜவுளிக்கடை செல்லும்
இடம் கலகலப்பு. அசின் அ
ஆடையைக் குறை சொல்லி
இடத்தில் குடும்பப் பெண்க
அள்ளுகிறார்.

ரவுடிகளுடன் மோதும்
னல் போல் பாய்ந்து இடி
லூரி மாணவனுக்காகப்
வது 'சுளீர்'.

சொந்த ஊரான நாட்ர
அம்மா தங்கை நிலையை
உணர்ச்சியின் உச்சக் கட்டம்
துக்கொண்ட அண்ணன் மீது ஆவேசப
எம்.எல்.ஏ ஆக்கும் முயற்சி கதையின் தி

பிரகாஷ்ராஜுடன் மோதும் இடங்கள்
குடும்பச் சொத்தை விற்க செய்யும் தந்தி
காட்சி 'முத்திரை'. பிரகாஷ்ராஜை பிளாக்
பது, அவரை மனம் மாறச் செய்வது என்
ரசிகர்களையும் மனம் மாற்றி தன்பக்கம்
கர்களைப் பட்டாசுவெடிக்கச் செய்திருக்கி

கல்லூரி மாணவியாக விஜய் காதல
'கவர்ச்சி'யாக வந்து கலக்கும் அசின்,
னும் அடக்கமான உடைகளிலும் வந்து
போதும் காதலை வெளிப்படுத்தும் போது
காக வாதாடும்போதும் அதற்கேற்ற உணர்ச்சி
அசர வைக்கும் அசின், ரசிகர்களின் மன

பிரகாஷ்ராஜ் விஜய் அண்ணனாகவு
ட்டுகிறார். பிரகாஷ்ராஜைப் பற்றி விஜய் 'நீ உ
வது கதைக்கு மட்டுமல்ல உண்மையாக
மாமியாராக தெலுங்கானா சகுந்தலா.

நயன்தாரா தேர்தல் பிரசாரத்துக்கு வந்
தாய் தந்தையாக கீதா ,ராஜேஷ். தங்
எம்.எஸ்.பாஸ்கர், வெங்கட்பிரபு, சிட்டிபாபு உ
சரவெடியின் குதூகலத்துக்கு முழு ஒத்துழை

இயக்குனர் பேரரசு சிவகாசியின் ஒ
தாப்பாகவும் பூவாணமாகவும் சரவெடியாக
கலப்படுத்தியிருக்கிறார். பேரரசுக்கு மீண்டு

இசை:ஸ்ரீகாந்த் தேவா. துள்ளல் பாட
கொள்ளை கொண்டிருக்கிறா...
கள் அசத்தல். சிவகாசி மூலம் ரசிகர்களை
திருக்கிறார்கள். ஆரம்பம் முதல் கடைசிவ

விஜய்க்கு தொடர் வெற்றியை கொ
வெடிக்க வைத்திருக்கிறது 'சிவகாசி'.

*வண்ண ஜாலம் கலந்த கோல*



...தண்டனை வெறுகிறான் முத்தப்பா. கோபத்தில் ...றும் அவன் சென்னை வந்து 'வெல்டிங்' கடை ...பெயர் சிவகாசி என்கிறான்.

...மோதும் ரவுடிகளை அடக்குகிறான். நண்பர் ...த என்கிறான். ...த நிலையில் அவனது வாழ்க் ... மாணவி குறுக்கிடுகிறாள். திருமணம் செய்து ... குடும்பத்தில் சம்மதிக்கிறார்கள்.

...வனது காதலிக்கும் ஏற்படும் வாக்குவாதத்தின் ...ாதை தானே பாசத்தைப் பற்றி உனக்கு என்ன ...அவன் உணர்ச்சி வசப்படுகிறான். 'எனக்கும் தாய், ...இருக்கிறார்கள்' என்று சொல்கிறான். 'அப்படியா ... வந்து பெண் கேள்' என்று அவள் சொல்ல ...றான்.

...அண்ணன் உடையப்பா எம்.எல்.ஏ.வாக இருக் ...ல்லாமல் வேதனை அனுபவிக்கிறாள். தங்கை ...கயை நடத்துகிறாள். இதை நேரில் காணும் ...றான். அண்ணனை அடக்கி குடும்பச் சொத்தை ...ய் தங்கையை வாழ வைத்து தனது காதலியைக் ...க்க அவன் என்ன சாகசம் செய்கிறான் என்பது ...தை.

...காசியாக விஜய் அறிமுக காட்சியிலேயே 'ஷ ...வல்டி... ...வட்டி அனல் பறக்க கடைக்குள் ... வெளியேறுவதில் தொடங்கும் ரசிகர்களின் ...ஷம் அவர் வரும் ஒவ்வொரு காட்சியிலும் தொடர்

...ரிக்கடை செல்லும் அசினை விஜய் சந்திக்கும் ...லகலப்பு. அசின் அணிந்து வரும் அரை குறை ...யக் குறை சொல்லி நாகரிக பெண்களைச் சாடும் ... குடும்பப் பெண்களின் ஆதரவை அமோகமாக ...கிறார்.

...களுடன் மோதும் ஒவ்வொரு காட்சியிலும் மின் ...ால் பாய்ந்து இடிபோல் முழக்கமிடுகிறார். கல் ...ணவனுக்காகப் பெண் பொலிஸுடன் மோது ...ரீ'.

...த ஊரான நாட்டரசன் கோட்டைக்கு சென்றதும் ...தங்கை நிலையைப் பார்த்து விஜய் உருகுவது ...யின் உச்சக் கட்டம். சொத்தையெல்லாம் அபகரித் ...ன் மீது ஆவேசம் கொப்பளிக்க தங்கையை ...பற்சி கதையின் திருப்பம்.

...மோதும் இடங்கள் ஆக்ரோஷம். பிரகாஷ்ராஜ் ...க செய்யும் தந்திரத்தை விஜய் முறியடிக்கும் ...ாஷ்ராஜை பிளாக் மெயில் செய்து பணம் பறிப் ...றச் செய்வது என்று பிரகாஷ்ராஜை மட்டுமல்ல ...மாற்றி தன்பக்கம் இழுத்துக் கொள்கிறார். ரசி ...க்கச் செய்திருக்கிறார்.

...ாக விஜய் காதலியாக அசின். ஆரம்பத்தில் ...ம் அசின், ...னர் பாவாடை – தாவணியுட ...ம் வந்து ...த்துகிறார். விஜயை சீண்டும் ...ந்தும் போதும் தனது அண்ணன் களுக் ...தற்கேற்ற உணர்ச்சிகளை விதம் விதமாக மாற்றி ..., ரசிகர்களின் மனதையும் அள்ளுகிறார்.

... அண்ணனாகவும் வில்லனாகவும் வந்து மிர ...ப் பற்றி விஜய் 'நீ உலக நடிகன்' என்று சொல்லு ...ல உண்மையாகவே பொருந்துகிறது. இவரது ...னா சகுந்தலா.

...பிரசாரத்துக்கு வந்து நடனம் ஆடுகிறார். விஜய் ...,ராஜேஷ். தங்கையாக கார்த்திகா. தேவன், ...ட்பிரபு, சிட்டிபாபு உட்பட அனைவருமே 'சிவகாசி' ...க்கு முழு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள்.

... சிவகாசியின் ஒவ்வொரு காட்சியையும் மத் ...கவும் சரவெடியாகவும் தந்து ரசிகர்களை குதூ ... பேரரசுக்கு மீண்டும் வெற்றி கிடைத்துள்ளது. ...வா. துள்ளல் பாடல்களை கொடுத்து மனதை ...க்கி... ...வு: தெளிவு. கிராபிக்ஸ் காட்சி ...மூலம் ரசிகர்களை தீபாவளி கொண்டாடவைத் ... முதல் கடைசிவரை கதை வேகம் 'ஜெட்' ...வெற்றியை கொடுத்து ரசிகர்களை பட்டாசு ...து 'சிவகாசி'.

*...லம் கலந்த கோலாகல சரவெடி.*


## சரத்குமார் அக்கறை

உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்வதில் சரத்குமார் முன்புபோலவே, இன்றும் மிகவும் அக்கறையுடன் இருக்கிறார். 'நல்ல உடற்கட்டும் நோய் இல்லாத வாழ்க்கையும்தான் என் சினிமா வாழ்க்கையின் அடித்தளம்' என்கிறார். இதற் காக தினமும் தவறாமல் 2 மணி நேரம் உடற்பயிற்ச' செய்கிறார்.

'புல்லப்ஸ்', 'வெயிட் லிட்' என்று அனைத்து விதமான உடற்பயிற்சிகளும் செய்வதுடன், ஆயிரம் முறை 'ஸ்கிஸ்கிபிங்' செய்வதும் இதில் அடக்கம்.

* * *

'சண்டைக்கோழி' படத்தில் வரும் சண்டைக் காட்சிகளை வித்தியாசமான கோணத்தில் கணல் கண்ணன் படமாக்கி உள்ளார்.



'மஜா'
விக்ரம் – அசின்

## கரண் நாயகனாக நடிக்கும் கொக்கி

'நம்மவா' படம் மூலம் தமிழ்த்திரையுலகுக்கு அறிமுகமானவர் கரண். இவருடைய திறமையை உணர்ந்து கமலஹாசன் அளித்த வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்ட கரண், அதன்பிறகு வில்லனாகவும் குணச்சித்திர நடிகராகவும் பல படங்களில் சிறப்பாகப் பரிணமித்தார்.

இடையில் சில காலம் வாய்ப்புகள் வந்தும் அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் 'கொககி' படத



துக்காகத் தன்னைத் தயார் செய்துள்ள கரண் 22 கிலோ எடை குறைந்து மிகவும் ஸலிம்மாக உள்ளார்.

இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் புகழ்பெற்ற வங்காள நடிகை சஞ்சனா. இவர்களோடு கோட்டா சீனிவாசராவ், மாணிக்கவிநாயகம், மலேசியா வாசுதேவன், எம்.எஸ்.பாஸ்கர், சக்திகுமார் ஆகியோரும் ரமேஷ், ஆனந்தகுமார், நந்தா என்ற கூத்துப்பட்டறை மாணவர்களும் நடிக்கிறார்கள்.

படத்தில் எந்த நடிகருக்கும் மேக்கப் கிடையாது. கதை நிஜம்; சூழல்கள் நிஜம்; நிகழ்வுகள் நிஜம்... என அனைத்தையும் யதார்த்தமாக அமைத்து படத்தை உருவாக்கி வருகிறார்கள்.

விக்ரம் நடித்த 'கிங்'படத்தை இயக்கிய பிரபு சாலமன்தான் 'கொக்கி' படத்தை இயக்குகிறார். தினா இசையமைக்கிறார். பாடல்கள்- பா.விஜய, கபிலன், யுகபாரதி. ஒளப்பதிவு- ஜீவன். தயாரிப்பு- ஃப்ரண்ட்ஸ் சினிமா (பி) லிட்.

## நிருபர் கோபிகா



தமிழில் வெளியான 'தொட்டி ஜெயா' படமும், மலையாளத்தில் திரைக்கு வந்த 'சாந்துப்பொட்டு', 'நேர் அறியான் சி.பி.ஐ' ஆகிய படங்களும் மிகப்பெரிய வெற்றி பெற்ற காரணத்தால், கோபிகாவின் மவுசு இருமொழிப்படவுலகிலும் கொடி கட்டிப் பறக்கிறது.

தமிழில் தனுஷ் ஜோடியாக 'அசோகமித்ரன்' என்ற படத்தில் ஒப்பந்தமாகியுள்ள அவர், மலையாளத்தில் ஷாஜிகைலாஷ் இயக்கத்தில் சுரேஷ்கோபியுடன் 'தி டைகர்' படத்தில் நடிக்கறார். அவரது தந்தையாக திலகன் நடிக்கிறார்.

இதில் கோபிகா ஏற்றுள்ள நிருபர் கதாபாத்திரத்தில் எப்படி நடிக்க வேண்டும் என்று முன்னாள் பத்திரிகை நிருபரான தனது கால்ஷீட் மனேஜரிடம் ஆலோசித்துள்ளார்.

## சபதத்தை மறந்த ரம்யா

தமிழ்ப் படவுலகுக்கும், கன்னடப் படவுலகுக்கும் முன்பொரு முறை ஏற்பட்ட பிரச்சினை படுபூதாகரமாக வெடித்தது. "இனிமேல் தமிழ்ப் படங்களில் நடிக்க மாட்டோம்" என்று 'குத்து' படப்புகழ் ரம்யா. 'அழகேசன் பிரேமா, 'இயற்கை' புகழ் குட்டி ராதிகா போன்ற நடிகைகள் வீரசபதம் செய்திருந்தனர்.

ஆனால், இவர்களில் ரம்யா மட்டும் அந்த சபதத்தைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டார். ஆர்.கே.வின் செண்ட் செல்வா இயக்கும் 'காக்கி' படத்தில் சரத்குமார் ஜோடியாக இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடிக்கும் அவர், தொடர்ந்து தமிழ்ப் படங்களில் திறமை காட்ட முடிவு செய்துள்ளார். அப்படியென்றால், அன்று வீராவேசமாகப் பேசியது என்னாயிற்று? ரம்யாவைத் தொடர்ந்து குட்டி ராதிகா ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்க பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. இதில புதுமுக ஹீரோ நடிக்கிறாராம்.



'தகப்பன் சாமி'
பிரசாந்த் – பூஜா

# மிக அபாயமான நிலையை நோக்கி நாங்கள் நகர்த்தப்படுகிறோம்

## 'ரொய்ட்டர்ஸ்' செவ்வியில் சு.ப. தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

யுத்தத்திற்கான முன்னெடுப்புக்களை நோக்கி நாம் நகருகிறோமா என்று எம்மால் கூறமுடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பட்டும் படாமலும் விலகி நிற்கும் போராளிகள் சமிக்ஞைக்குக் காத்திருக்கும் வாக்காளர்கள் என்ற தலைப்பில் ரொய்ட்டர்ஸ் செய்தித்தாபனம் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அக் கட்டுரையை எழுதிய ஊடகவியலாளர் பீற்றர் ஆப்ஸ்க்கு கிளிநொச்சியில் வைத்து அளித்த செவ்வியிலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் இக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் வெளியிட்டிருக்கும் கட்டுரையில், இலங்கைத் தீவில் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலி போராளிகள் முழுமையாக ஆர்வம் கொள்ளாமல் இருக்கின்றனர்.

ஆனால் அவர்களது பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் இது தொடர்பிலான போராளிகளது நகர்வுகளுக்காக காத்திருக்கின்றனர்.

போராளிகளின் முழுக் கட்டுப்பாட்டுப்பகுதியான வடபகுதியில் உள்ள கிளிநொச்சியில் உள்ள சில வாக்காளர்கள் தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வை எதிர்க்கும் சிங்களத் தேசியவாதிகளின் தெரிவான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைவிட 2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உரு வாக்கிய ரணிலையே தேர்வு செய் கின்றனர்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடைமுறை தலைநகரமாக உள்ள கிளிநொச்சியில் உள்ளவர்களும் அதைச் சுற்றி வசிப்பவர்களும் வாக்குப்பதிவு வீதமானது.

போராளிகளின் எண்ண ஓட்டத்திற்கு அமையவே இருக்கும் என்கின்றனர்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் என்ன செய்யவேண்டும் என்று எங்களுக்குச் சொல்கிறார்களோ அதையே நாம் செய்வோம்' என்று சுப்பையா ரவி என்கிற கடைக்காரர் தெரிவித்தார்.

அவர்கள் எங்களை வாக்களிக்கக் கூறினால் வாக்களிப்போம் வாக்களிக்க வேண்டாம் என்று சொன்னால் வாக்களிக்க மாட்டோம் என்றார் அவர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள வாக்காளர்களில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களே அதிகம். அவர்கள் அனைவரும் வாக்களிப்பு நாள் அன்று அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சூனியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்கு பேருந்துகளில் அழைத்துவரப்படவுள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பான இரு தசாப்த காலயுத்தத்தில் 64 ஆயிரம் பேர் இரு தரப்பிலும் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கொண்டுவந்த ரணில் விக்கிரமசிங்கவால்த் தான் நிரந்தர அமைதியை உருவாக்க முடியும் என்றும் பலரும் கருதுவதாக நோக்கர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ரொய்ட்டரிடம் கூறுகையில்,

எந்தவொரு வேட்பாளரது உறுதிமொழிகளும் உள்ளத்தில் இருந்து வெளிவருவதல்ல. இருவருமே தமிழர் மற்றும் சிங்களவரின் வாக்குகளைப் பெறுவதற்காக 'அமைதி' என்பதை ஏலம் விட்டுக்கொண்டுள்ளனர் என்கிறார்.

மேலும் தேர்தல் முடிந்த பின் அவர்கள் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் மறந்து விடுவார்கள். நாம் முழுமையாகவே இந்தத் தேர்தல் குறித்து எதுவித அக்கறையும் கொள்ளவில்லை. நாம் பொறுப்பான ஒரு அரசியல் இயக்கம்.

எமது மக்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டும், எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க அவர்களுக்கு முழுச்சுதந்திரம் உண்டு என்றார்.

கடந்த 3 ஆண்டு கால யுத்த நிறுத்த ஒப்பந்தமானது முன் எப்போதையும்விட தற்போது பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்துக்கான முன்னெடுப்புக்களை நோக்கி நாம் நகருகிறோமா என்று எம்மால் கூறமுடியாது ஆனால் மிகவும் அபாயகரமான நிலையை நோக்கி நாம் நகர்த்தப்படுகிறோம் என்று தமிழ்ச்செல்வன் எம்மிடம் தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ காவலரண்கள் கைக்குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி வருவது அதிகரித்துள்ளது. வாக்காளர்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இந்தத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்துவதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையையடுத்தே தமிழீழ விடுதலைப் புலிகளை தமது உறுப்பு நாடுகளில் வரவேற்கப்போவதில்லை என்றும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைக்கப் போவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருந்தாக சிலர் கருதுகின்றனர்.

இராணுவத்துக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இருந்தால் நாம் கண்டிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகி அதன் பின்னர் யுத்தத்தைத் தொடங்குவோம்.

இந்த மறைவான நடவடிக்கைகளைக் காட்டிலும் அதுதான் சரியானதாக இருக்கும் என்றார் தமிழ்ச்செல்வன்.


கிளிநொச்சியின் 30கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குண்டுத் தாக்குதல்களுக்குள்ளான பனை மரங்கள் உள்ள சூனியப் பிரதேசம் இரு பகுதியினரையும் பிரிக்கிறது. தங்களுக்கு வாக்களிக்கவிருப்பம் இருந்த போதும் ஆபத்தானதாக அது இருப்பதாக வாக்காளர்கள் எண்ணுகின்றனர்.

'தாங்கள் சொல்வதைத்தான் நாம் செய்யவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இது வரை எம்மை அறிவுறுத்தியது இல்லை. விடுதலைப் புலிகள்தான் மக்கள், மக்களாகிய நாங்கள்தான் விடுதலைப்புலிகள்' என்று கிளிநொச்சியில் உள்ள மக்கள் கூறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-4)









திருவள்ளுவர் மாநாட்டையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற மாபெரும் பண்பாட்டு பவனி நிகழ்வுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# கிளி.இல் சிறப்புற நடந்த பண்பாட்டுப் பவனி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் மாநாட்டையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரில் மாபெரும் பண்பாட்டுப்பவனி இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பித்த இப்பண்பாட்டுப்பவனி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தைச்சென்றடைந்தது.

தமிழரின் பாரம்பரிய இசைக் கருவிகள் முழங்க வன்னி மண்ணில் சேரன், சோழன் பாண்டியன் ஆகிய தமிழரசர்களின் பெயர்களில் இயங்கும் நிறுவனங்கள் அவ் அரசர்களையும், ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையினர் பண்டாரவன்னிய அரசனையும், கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் பேரரசர் இராவணனையும் சித்தரித்து அணிவகுப்புச் செய்து மிகவும் சிறப்பாக பண்பாட்டு அணிவகுப்பு இடம்பெற்றுவர இதன் போது திருவள்ளுவரின் திருவுருவப்படமும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பவனியாக பண்பாட்டு மண்டபத்தை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தை வந்தடைந்ததும் அங்கு கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ. கலைவாணன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றி வைக்க, வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் மற்றும் பவனியில் ஐந்து அரசர்களை சித்தரித்துவந்தோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து திருவள்ளுவரின் திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஏற்றி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து தலைமையுரை, வரவேற்புரை, வாழ்த்துரை, விருந்தினருரை என்பவற்றைத் தொடர்ந்து யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

இதன்போது இந்நிகழ்வில் பங்கு பற்றிய பாடசாலை மாணவர்களுக்கும் நிறுவனசார் ஊழியர்களுக்கும் நினைவுப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அன்றைய இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், முதல்வர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், போராளிகள், பொது மககள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ற)

# 5000 கண்காணிப்பாளர்கள் தேர்தல் கடமைகளில்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் உள்ளூர் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் 5ஆயிரம் பேர் தேர்தல் வன் முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் சார்பில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குப்பகுதியில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 30 கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இன்று ஒரு தகவல்

# அன்பின் வலிமை

ஒரு ராஜா இருந்தார்.அவருக்கு என்ன பொழுதுபோக்கு தெரியுமா? தன்னைச் சுற்றியிருப்பவர்களிடம் ஏடா கூடமாக ஏதாவது கேள்வி கேட்கவேண்டியது. அவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் முழிக்கிறார்களல்லவா? அதைப் பார்த்து ரசிக்கவேண்டியது. இப்படி ஒரு சுபாவம் அவருக்கு.

ஒருநாள் அவருடைய மந்திரி ஒருவர் அவரிடம் மாட்டினார். அவரை அருகே கூப்பிட்டு அமைச்சரே ஒரு சந்தேகம் என்றார்.என்ன? என்று கேட்டார் அமைச்சர். "கடவுள் இருக்கிறாரா?" என்று ஒரு கேள்வி கேட்டார். "ஆமாம்! இருக்கிறார்!"என்றார் அவர். அவர் என்ன சர்வவல்லமை படைத்தவரா? என்றார். "ஆமாம் அரசே! அவனன்றி ஓர் அணுவும் அசையாது! இருந்த இடத்திலிருந்தே கண் சிமிட்டும் நேரத்தில் ஏராளமான அற்புதங்களை செய்ய அவனன்றி யாரால் முடியும்?"என்றார்அமைச்சர்.

"இந்த இடத்தில் தான் எனக்கு இன்னொரு சந்தேகம்"என்றார் ராஜா. "என்ன சொல்லுங்கள்"என்றார் அமைச்சர். "நீங்கள் சொல்கிறீர்கள்... அவர் சர்வவல்லமை படைத்தவர். இருந்த இடத்திலே இருந்துகொண்டே ஏராளமான அற்புதங்களை செய்யக்கூடியவர் என்று. அப்படியிருக்கும்போது அவர் இருந்த இடத்திலிருந்தே ஒருவனுடைய கஷ்டத்தை தீர்த்துவைத்துவிடலாமே. அதை விட்டு விட்டு பக்தன் கூப்பிட்டால் உடனே ஒரு வாகனத்தில் ஏறி ஏன் இங்கு ஓடி வரவேண்டும்?அப்படி வருவதாக புராணங்கள் சொல்கின்றனவே. அவருக்கு இருக்கும் சக்திக்கு அவர் உட்கார்ந்த இடத்திலிருந்து ஒரு விரலசைத்தால்...இங்கே பக்தனுக்குக் கிடைக்க வேண்டிய எல்லாம் கிடைத்துவிடாதா?" என்றார்.

அமைச்சர் யோசித்தார்...அதன்பின் சொன்னார். "அரசே... இந்தக் கேள்விக்கான பதிலை சமயம் வரும் போது உங்களுக்குச் சொல்கிறேன்"என்று கூறி அப்போதைக்கு அவரிடம் இருந்து தப்பித்தார். சில காலம் கழித்து ஒரு நாள்... ராஜா உல்லாசப் பயணம் புறப்பட்டார்.அவருடைய குடும்பம்... உறவினர்கள்...எல்லோரும் சேர்ந்து போனார்கள். ஒரு பெரிய படகில்ஏறி ஒரு நதியைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அந்தப் படகில் ஒரு முனையில் உட்கார்ந்து நதியின் அழகை ரசித்துக்கொண்டிருந்தார் ராஜா. இன்னொரு முனையில் அமைச்சர் இளவரசனுக்கு ஏதோ வேடிக்கை விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தார்.படகு நடு ஆற்றில் போய்க்கொண்டிருந்தபோது தொப்பென்று பெரிய சத்தம்.

"அரசே நமது இளவரசர் ஆற்றில் விழுந்து விட்டார்" என்று அலறினார் அமைச்சர்.அவ்வளவுதான் உடனே ராஜா குபீரென்று ஆற்றில் பாய்ந்தார். மகனைத் தேட ஆரம்பித்தார். அங்கும் இங்கும் கொஞ்ச நேரம் அல்லாடினார். மகனைக் காணவில்லை. அதன் பின் மந்திரியும் ஆற்றில் குதித்து ராஜாவிடம் வந்தார்! "அரசே இளவரசன் படகில் பத்திரமாக இருக்கிறார் தண்ணீரில் விழுந்தது வெறும் கல் தான் என்றார். இரண்டு பேரும் ஈர உடையுடன் படகிற்கு வந்து சேர்ந்தார்கள். ராஜா மந்திரியை கோபமாகப் பார்த்தார். இது என்ன விளையாட்டு?" என்றார்.

"அரசே கொஞ்ச நாட்களுக்கு முன்பு நீங்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலை அனுபவரீதியாக உணர வேண்டும் என்று ஆசைப்பட்டேன் அதனால்த்தான் இப்படி!" என்றார் அமைச்சர். அதன் பின்பு விளக்கம் கொடுத்தார். "அரசே! ஒரு பக்தனுக்கு கஷ்டம் என்றால் இருந்த இடத்தில் இருந்து அதைத் தீர்த்துவைக்காமல் கடவுளே ஏன் நேரில் ஓடி வரவேண்டும் என்று கேட்டீர்கள். இப்போது நடந்தது என்ன? இளவரசர் தண்ணீரில் விழுந்துவிட்டார் என்றதும் நீங்கள் "ம் என்று சொல்லி ஒரு விரலை காட்டினால் போதும்... உடனே தண்ணீரில் குதிக்க ஏராளமான காவலர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? இளவரசர் விழுந்துவிட்டார் என்றதுமே அவர் எந்தப் பக்கம்.... எந்தத்திசையில் விழுந்தார் என்று கூடக் கேட்காமல் உடனே தண்ணீரில் குதித்தீர்கள். அப்படி உங்களை குதிக்க வைத்தது எது? மகன் மீதுள்ள பாசம்! அன்பு அது மாதிரித்தான். கடவுளும் ஓடி வருகிறார்" என்றார். அதன்பின் அந்த ராஜா ஏடாகூடமாகக் கேள்வி கேட்பதை விட்டுவிட்டார்.

இந்தத் தகவலை கேட்டுவிட்டு உடனே நீங்களும் கடவுளே! கொஞ்சம் இப்படி வந்துவிட்டுப்போ" என்று கூப்பிட்டு அவர் வருகிறாரா என்று ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள். இந்தக் கதையின் கருந்து என்னவென்றால் "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்?" என்பது தான். அன்பு வலிமையானது என்பதை புரிந்து கொண்டால் போதும். உங்களுக்கு ஒரு திருமண அழைப்பிதழ் வந்தால் நீங்கள் வாழ்த்துச்செய்தி அனுப்புவதற்கும் நேரில போவதற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா? அன்று ஒருவன் அப்படித்தான் வந்தான். கையில் ஒரு திருமண அழைப்பிதழ் வைத்திருந்தான்."சார் "இந்தக் கல்யாணம் கொல்கத்தாவில் நடக்கிறது. மிகவும் தூரம் இருந்தாலும் நான் நேரில் போய்க் கலந்துகொள்ளப் போகிறேன் எனறான். "மாப்பிள்ளை அவ்வளவு நெருக்கமானவரா?" என்றேன. 'இல்லை சார் மாப்பிளையே நான் தான்." என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அனைத்து அரசியல் கட்சிகளும் பிரதமருக்கே ஆதரவு-சோமவன்ச

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவளிக்க நாட்டிலுள்ள செல்வாக்கான கட்சிகள் அனைத்தும் அணிதிரண்டுள்ளன என்று ஜே. வி. பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வெலிமடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிற்கா? அல்லது விடுதலைப் புலிகளுக்கா? வெற்றி என்பது ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளிலிருந்து தெரியவரும் என்றும் அவர் அங்கு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸுடனும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடனும் செய்து கொண்ட உடன் படிக்கையில் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் ஐக்கிய தேசியக்கட்சி ஏன் தயங்குகிறது? என்றும் சோமவன்ஸ அமரசிங்க அங்கு வினா வெழுப்பினார்.



பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ அங்கு உரையாற்றுகையில் இந்த நாட்டின் பொருளாதார போக்கை மக்களே தீர்மானிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதே 'மஹிந்த சிந்தனையின்'முக்கிய நோக்கமாகும்.

மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறு ஒரு வேட்பாளர் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால் அது வெளிநாட்டுச் சக்திகள் இங்கு ஆதிக்கம் செலுத்த வழிவகுப்பதாக அமையும்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (ந-7)

# அரசியல் வன்முறைகளால் தெற்கில் 33000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் வன்முறைகளை மேற்கொண்ட குழுக்களை நான்கு ஆணைக் குழுக்களை நியமிப்பதன் மூலம் கண்டுபிடிக்க முயன்றதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் வன்முறையினாலேயே தனது கணவரையும் இழக்கநேரிட்டதாகவும் அவர் கூறினார். அரசியல் வன்முறைகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் நட்டஈடுவழங்கப் பட்டது. இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிீத்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஒரு காலத்தில் அரசாங்கமும் ஜே.வி.பியும் கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டனர். எமது மக்களை ஜே.வி.பி கொன்றது.ஜே.வி.பியை அரசாங்கம் கொன்றது. அப்போது ஜே.வி.பி எம்மவர்களையும் ஐ.தே. கட்சியினரையும் கொன்றது.

தெற்கில் 33ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். எம்மைக்கொன்ற ஜே.வி.பியினருக்கு மீண்டும் முக்கியத்துவம் அளித்து நாம் அரசியல் புரியும் உரிமையை வழங்கினோம்.

நீங்கள் கணவனை ,சகோதரர்களை ,உறவினர்களை இழந்தவர்களாக இந்த இடத்தில் இருக்கின்றீர்கள். அதேபோல் தான் நானும் இந்த அரசியல் வன்முறைகளில் எனது கணவனை இழந்தேன். நான் கூறிய அந்த அரசாங்கமும் ஜே.வி.பியும் இணைந்து தான் இந்த வேலையை செய்தார்கள். இதனை விட நாட்டுக்கு தலைமைத்துவம் வழங்கவிருந்த பல அரசியல் தலைவர்கள் இன்று இல்லை. இந்த அரசியல் வன்முறையினாலேயே அவர்கள் கொல்லப்பட்டனர். நோய் வாய்ப்பட்டு இறந்திருந்தால் குற்றம் செய்து இறந்திருந்தால் பரவாயில்லை.

ஆனால் உண்மையாகவே நாட்டுக்காக வேலை செய்வதினால் திருட்டுத்தனமாக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் அரசியல் வியாபாரத்தில் ஈடுபடவும் எதிர்த்தவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது பாரிய அச்சுறுத்தலான நிலையாகும் என்றார். (ந-8)

# சகல இனமக்களுக்கும் நன்மையளிக்கும் தீர்வை நோக்கியே எமது வேலைத் திட்டம்


## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓர் இனத்தினது உரிமைகளை பாதுகாப்பதினால் மட்டும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியாது என எதிர்க் கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால் அனைத்து இனமக்களுக்கும் நியாயம் கிடைக்கக்கூடிய விதத்தி லான தீர்வு ஒன்று குறித்தே தாம் கவனம் செலுத்துவதாகவும் அவர் கூறினார். பொர ளைபிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் நானும் சிங்களவனே. எனக்கும் நாட்டை பாதுகாக்கும் தேவையுள்ளது. எனினும் எவ்வாறு நாட்டை பாதுகாப்பது என்பது குறித்து நான் உண்மை கூறவேண்டும். மக்களை அச்சுறுத்தி இதனை செய்ய முடியாது. தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி சிங்களவர்களின் உரிமைகளை வழங்காமல்விட்டால் நாட்டை ஐக்கியப்படுத்த முடியும் என என்னால் கூறமுடியாது.



எனவே, அனைவருக்கும் நன்மையளிக்கக் கூடிய எவரும் பாதிக்கப்படாத தீர்வு ஒன்றினை நோக்கியே நாம் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் என்றார். (ந-8)

## புலிகளின் சீருடையில் ரணில்;

# சுவரொட்டிகளுடன் கைதான நபர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடையிலும் கொடியை கையில் பிடித்தவாறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க இருப்பதாக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டிகளை வைத்திருந்ததாகக் கைதுசெய்யப்பட்ட நபரை கொழும்பு நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

கிருலப்பனை பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சுவரொட்டிகளில் விடுதலைப் புலிகள் சீருடையில் ரணில் விக்கிரமசிங்க தோன்றுவது போன்ற பெரிய படங்கள் இருந்துள்ளன.

அந்தப்படத்தின் ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளின் கொடியும் மறுபுறத்தில் கிழக்கு மாகாண வரைபடமும் உள்ளதுடன் யார் இவர்? என்ன செய்கிறார்? என்ற வாக்கியங்களும் அதில் பொறிக்கப்பட்டிருந்ததாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகள் முடிவடையாததால் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் கேட்டனர்.

எனினும் சந்தேக நபர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினார். விடயங்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய ஐயாயிரம் ரூபா அபராதம் மற்றும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் பிரஸ்தாப நபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (ந-4)

# சச்சின் 37

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை



முதல் பதினைந்து ஓவர்களில் சச்சின்
பாணியில் குறிப்பிடத்தக்க ரன்களைச்
அணியையும் இந்தியா மிகச் சுலப
ரசிகர்கள் திடமாக நம்பினார்
மனிதராகவே உலகக்
வென்று தர முடியும்என்று
நிபுணர்களும் கருத்துத்
உலகக் கோப்பைப்
எதிர்பார்க்கிறவர்கள்
போட்டிகள் இந்தி
சச்சினின் மேல்
பார்ப்பினாலும்உல
தீவிரமானது!
இந்திய
நம்பிக்

நடை
எதிராக
வெஸ்ட் இண்
90, இலங்கைக்கு
பொழிந்தார். பெங்
பாகிஸ்தானை இந்
கல்கத்தாவில்
போட்டி ஈடன் கார்
மேற்பட்ட ரசிகர்
தகுதி பெறும்
திருந்தார்கள்.
ரசிகர்களின்
போட்டியில் சிறப்பாகவே

தனது வழக்கமான அதிரடி
சேர்த்துவிட்டாலே போதும் எந்த
மாக வீழ்த்திவிடும் என்று
கள். சச்சின் நினைத்தால் தனி
கோப்பையை இந்தியாவுக்கு
பத்திரிகைகளும் கிரிக்கெற்
தெரிவித்தார்கள். பொதுவாகவே
போட்டிகளை மிகுந்த பரபரப்போடு
ரசிகர்கள். மேலும் இந்த முறை
யாவிலேயே நடை பெறுவதாலும்
உண்டாயிருந்த அளவற்ற எதிர்
கக் கோப்பை ஜுரம் இன்னும்

ரசிகர்கள் தன் மேல் வைத்திருந்த
கையைப் பூர்த்தி செய்வது போல்
சச்சின் உலகக் கோப்பை போட்டிகளில்
அபாரமாக விளையாடினார். கட்டாக்கில்
பெற்ற முதல் போட்டியிலேயே கென்யாவுக்கு
127 ரன்கள் குவித்தார் சச்சின். தொடர்ந்து
டீஸ் அணிக்கு எதிராக 70, ஆஸ்திரேலியாவுடன்
எதிராக 137ரன்கள் என்று ரன் மழை
களூரில் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில்
தியா தோற்கடித்தது.
இலங்கை அணியுடன் முக்கியமான அரையிறுதிப்
டன்ஸ் மைதானத்தில் ஒரு லட்சத்துக்கும்
கள் தங்கள் அணி இறுதிப் போட்டிக்குத்
என்கிற நம்பிக்கையோடு வந்து குவிந்

எதிர்பார்ப்பை ஏமாற்றாத சச்சின் அந்தப்
விளையாடினார். ஆனால் 65 ரன்களில்

சச்சின் ஆட்டமிழந்த பின் மளமளவென்று மற்ற விக்கெற்கள் ஒற்றை இலக்க ரன்களில் சரிய இதைப் பார்த்து வெறுத்துப்போன ரசிகர்கள் கலாட்டாவில் இறங்க போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்திய அணி இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தது!

1996 உலகக் கோப்பையில் மொத்தம் ஏழு போட்டிகளில் விளையாடிய சச்சின் இரண்டு சதங்கள் மூன்று அரை சதங்களுடன் மொத்தம் 523 ரன்கள் குவித்திருந்தார். உலகக் கோப்பை கிரிக்கெற் வரலாற்றில் அன்று வரை எந்த பேட்ஸ்மேனும் ஒரே போட்டித் தொடரில் 500 ரன்கள் எடுத்ததில்லை. இப்படி ஒரு கௌரவம் மிக்க சாதனையைச் செய்திருந்தபோதும் இந்தியாவுக்கு உலகக் கோப்பையை வென்று தர முடியாததில் அவருக்கு அளவற்ற வருத்தம்.

உலகக் கோப்பை போட்டிகளுக்குப் பின் இந்திய அணியின் இங்கிலாந்துப் பயணம் ஏற்பாடாகி இருந்தது. அப்போது இந்திய கேப்டன் அஸாருதீனின் தலைக்கு மேல் ஒரு கத்தி மெலிதான நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்தது. உலகக் கோப்பை தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று அஸாருதீன் தனது கேப்டன் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று பலமான கோரிக்கைகள் எழுந்தன.

ஆகவே இங்கிலாந்து தொடர் அஸாருதீனுக்கு ஒரு அக்னிப் பரீட்சையாகக் கருதப்பட்டது. இதில் ஜெயித்தால் அஸாருதீன் கேப்டனாகத் தொடரலாம். இல்லை என்றால் அணியில் இடம் பெறுவதே சந்தேகம் என்ற நிலைமை உதவி கேப்டனான சச்சின் டெண்டுல்கரை அணித்தலைவர் ஆக்கினால் அவரால் திறமையோடு செயல்பட முடியுமா என்பது குறித்த தீவிரமான விவாதங்கள் இந்திய அணி இங்கிலாந்துக்கு விமானம் ஏறும் முன்பே துவங்கிவிட்டன.



இங்கிலாந்து அணியுடன் மூன்று டெஸ்ட்களிலும் மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியது இந்திய அணி. இன்றைய இந்திய அணியின் நட்சத்திரங்களான சவுரவ் கங்குலி, ராகுல் திராவிட் இருவரும் இங்கிலாந்துடனான அந்தத் தொடரில்தான் வெளிச்சத்துக்கு வந்தார்கள்.

சச்சினுக்கு இது ஐந்தாவது இங்கிலாந்துப் பயணம். இதற்கு முன் இங்கே விளையாடி வந்த போதெல்லாம் இருந்திராத ஒரு மன அழுத்தம் இந்த முறை அவரைச் சூழ்ந்திருந்தது. தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் இந்திய கிரிக்கெற் போர்ட் கவனிக்கிறது என்பது அவருக்குத் தெரிந்ததுதான். அதே போல சச்சினின் நடவடிக்கைகள் அனைத்தையும் உன்னிப்பாகக் கண்காணித்துக்கொண்டிருந்தது இந்திய அணி நிர்வாகம். அவர்களுடைய சந்தேகமெல்லாம் ஒன்றுதான். இருபத்து மூன்று வயது சச்சின் டெண்டுல்கரால் கேப்டன் பதவியையும், அதனால் உண்டாகும் கூடுதல் பளுவையும் சமாளிக்க முடியுமா? முதலாவதாக நடைபெற்ற ஒரு நாள் போட்டித் தொடரில் சச்சின் மூன்று போட்டிகளிலும் சேர்த்து 37 ரன்கள் தான் எடுக்க முடிந்தது. மறுபுறம் அஸாருதீன் சிறப்பாக ஆடி தொடர் நாயகன் விருது பெற்றார். ஆனாலும் இந்தியாவால் ஒரு போட்டியில்கூட வெற்றிபெற முடியவில்லை.

(தொடரும்)

# சுகாதார சேவை ஊழியர்கள் போராட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்களின் அதிகரித்த கொடுப்பனவை 50 வீதத்தைக் குறைப்பதற்கான சுற்றறிக்கையை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் இரத்துச் செய்யாவிடில் மூன்று பிரதான வைத்திய சாலைகளின் ஊழியர்களை ஒன்று திரட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கும் அதே நேரம் வைத்தியசாலைகளில் வேலை நிறுத்தப் போராட்டமும் நடை பெறும் என்று சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் செயலாளர் ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரச சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட 2500ரூபா கொடுப்பனவை சுகாதார சேவையாளர்களுக்கு வழங்குகையில் அதில் 50 வீதத்தைக் குறைக்கும் வகையில் சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருக்கும் சுற்று நிருபத்தை இரத்துச் செய்யுமாறு கோரியே இந்த வேலை நிறுத்தப்போராட்டமும் உண்ணாவிரதமும் நடைபெறவுள்ளது. (ந)

# ஈரானுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு — உடன்படிக்கைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஈரானுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துள்ளதாக அமைச்சரவைப்பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையின் படி இலங்கையின் தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது நிதி மற்றும் பொருள் உதவிகளை ஈரானில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் ஈரானுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த பாதுகாப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கை தொடர்பாக அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறவென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் காலை நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் அமைச்சரவைப்பத்திரத்தை ஒப்படைத்ததாகவும் அதனை அமைச்சரவை ஏற்று ஒப்புதல் அளித்ததாகவும் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# பாரிய பள்ளத்தின் மேல் மதகு நிகொட் உதவியுடன் அமைப்பு



(கல்வியங்காடு)

இருபாலை கிழக்கு வசந்தபுரம் கிராமத்தில் வி.எச். லேன் என அழைக்கப்படும் வீதியில் காணப்பட்ட பாரிய பள்ளத்தின் மேல் தற்பொழுது மதகு அமைக்கப்பட்டுள்ளது..

கடந்த 3 தசாப்த காலத்திற்கு மேலாக அந்த வீதி செப்பனிடப்படாத நிலையில் இருந்தது. கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்தே இம்மதகு அமைக்கப்பட்டுள்ளது.

நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 4 இலட்சம் ரூபா செலவில் இம்மதகை அமைத்த பொழுதிலும் வீதி செப்பனிடப்படவில்லை.

இவ்வீதியை இருபாலை கிழக்கு கந்தவேள் பாடசாலை மாணவர்கள் இருபாலை சுடுகாடு மற்றும் வயல்களுக்குச் செல்லும் மக்கள், அப்பகுதி மக்கள் எனப் பலதரப்பட்டோரும் பாவித்து வருகிறார்கள்.

வீதி செப்பனிடப்படாத மக்கள் கஷ்டங்களுடனேயே இவ்வீதியில பயணம் செய்கின்றனர். மதகு அமைத்ததுடன் நின்றுவிடாமல் இவ் வீதியையும் புனரமைப்புச் செய்தால் தமது அன்றாட வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் என்பது இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பு. (து-74)

# திருமலை இராணுவ அதிகாரியை குறிவைத்தாராம் ஐஸ் மஞ்சு

(கொழும்பு)

இராணுவப்புலனாய்வு துறை அதிகாரியான ரிஸ்வின் மீடின் கொலையின் பிரதான சந்தேக நபரான ஐஸ் மஞ்சு ஒரு மாதத்திற்கு முன்னர் திருகோணமலையில் இராணுவ அதிகாரி ஒருவரின் நடமாட்டங்களை உளவு பார்த்ததாக பாதுகாப்புத்தரப்புத் தகவல் தெரிவிக்கின்றன.

ஞாயிறு பாடசாலை மாணவர்கள் மத்தியில் இவ் அதிகாரி உ[illegible] நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது முச்சக்கர வண்டியில் அங்கு வந்த ஐஸ் மஞ்சு அவரை உளவு பார்த்திருக்கிறார். இதனை அவதானித்த இராணுவ அதிகாரி பாதுகாவலர் ஐஸ் மஞ்சுவை பின் தொடர்ந்த போது ஐஸ் மஞ்சு தப்பித்துச் சென்றுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் கொட்டாவப் பகுதிக்கும் ஐஸ் மஞ்சு வந்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-4)

வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு மன்னிக்கப்படக் கூடாததாகும்.

*அப்துற் - றஹீம்*

வலம்புரி

# தமிழ்மக்களுக்கு ஆத்திரமூட்டும் உரை

நாட்டில் யுத்தத்தை இல்லாமல் செய்வதற்காக தாய்நாட்டை கூறுபோடுவதைத் தவிர வேறு எதனையும் வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

யாழ்ப்பாண விஜயம் என்ற பேரில் காங்கேசன் துறையில் உரையாற்றியபோது பிரதமர் மகிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரதமர் ஆற்றிய உரை, தமிழ்மக்களுக்கு நிச்சயம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். யாழ்ப்பாணத்தில் நிற்கின்றோம் என்ற நினைப்பில் சித்தம் கலங்கி மகிந்தவின் சீவன் நல்லவற்றை சிந்தித்ததோ என்று மக்கள் நினைக்கக்கூடும்.

கூடவே ஐயா! அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போங்கள். அப்போதுதான் உங்கள் சிரசுக்கேறியுள்ள பித்தம் குறையுமென்று ஆலோசனை கூற வேண்டும் போலவும் இருக்கும்.

ஆனால் உண்மை ஒன்று உண்டு. காங்கேசன் துறையில் பிரதமர் பேசியவற்றை விமல் வீரவன்ஸவிற்கு முன்னால் பேசமுடியுமா என்றால் அதுதான் இல்லை.

சமாதானத்திற்காக தாய்நாட்டைக் கூறுபோடுவதைத் தவிர வேறு எதனையும் வழங்கத் தயாராக இருக்கின்றேன் எனக்கூறிய பிரதமர் மகிந்த,

தான் நடத்துவந்த பாதையை சற்றுத் திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணியினை முன்னெடுப்பதற்காக அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை ரத்துசெய்யும் ஜே.வி.பியின் நிபந்தனைக்கு உடன்பட்ட மகிந்த, இப்போது எதனையும் வழங்கத் தயாராக இருப்பதாக கூறுவது அபத்தமானதாகும்.

இந்த நாட்டை ஆளப்போகும் ஒரு ஜனாதிபதி பொய்யுரை ஆற்றுபவராயின் அவர் இந்த நாட்டிற்கு பொருத்தமானவர் அல்ல என்பதே பொருளாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்த, பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்தாக்கல் என்ற சிந்தனையை வெளியிட்ட மகிந்த உள்ளத்தை உள்ளவாறு பேசுவராயின் அது இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்குத் சாதகமாக அமையலாம்.

இதைவிடுத்து காலாகாலமாக தமிழ்மக்களை ஏமாற்றிவந்த சிங்களத் தலைவர்கள் பாதையில் - பாணியில் பிரதமர் மகிந்தவும் உரையாற்றுவாராயின் அது தமிழ்மக்களுக்கு மிகமோசமான ஆத்திரத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

# யார் ஜனாதிபதியாக வந்தாலும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றபோவதில்லை

## சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

முதன்மை வேட்பாளர்கள் இருவரும் வழங்கும் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியுமா? என்று ஜே.வி.பி.கட்சியின் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த கேள்வியெழுப்பியுள்ளார்.

யாா பதவிக்கு வந்தாலும் பேரதிசயங்களை நிகழ்த்திவிட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளாா.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,ஒருவர் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பால் குவளை வழங்கப்போவதாக கூறும்போது மற்றவர் பகல் உணவு வழங்கப்போவதாகக்கூறுகிறார்.

இவ்வாறு இரு தரப்பினராலும் வழங்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? இவர்கள் எவரும் பதவிக்கு வந்தவுடன் பேரதிசயங்களை நிகழ்த்திவிடுவார்கள் என்று நாம் ஒருபோதும் நம்பவில்லை.

எமது உரிமைகளை வென்றெடுக்க நல்ல பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும். எல்லா அரசியல் கட்சிகளிலும் நல்லவர்கள் இருகின்றனர். ஆனால் கெட்டவர்கள் தான் முன்னணி வகிக்கிறார்கள்.

கூட்டமைப்புஅரசாங்கம்சில கூட்டுத்தாபனங்களை தனியார் மயப்படுத்த முயற்சித்தது தாம் அதற்கு இடமளிக்க வில்லை. அரச வங்கிகள் தொழிறசங்கங்களினால் தப்பின. நாட்டில் முதன்மைப் பிரச்சினை பொருளாதாரம் அல்ல.

ரணில் விக்கிரமசிங்க நினைப்பது போல் நாட்டில் பருப்பு ,நெத்தலி, பால்மா பிரச்சினை மட்டுமே இல்லை அவ்வாறாயின் நாம் கூட தனி வேட்பாளர் ஒருவரை நியமித்திருப்போம். நாம் காதீர்கள். பண்பாடு,தேசியபாரம் பரியம், நாட்டின் பாதுகாப்பு என்பவற்றை கருத்திற்கொண்டே மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குமாறு நாம் கோருகிறோம்.

தற்போது எமக்குத்தேவை இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பும், இறைமையும் மட்டுமே என்றும் தெரிவித்தார். (ற)

# ஆயுதக்குழுக்களை களையுமாறு கண்காணிப்புக்குழு வலியுறுத்து

அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களை களைய வேண்டும் என்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலட்ஸ்டொபிட்டிர் கூறியுள்ளதாவது.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராகவும் நாட்டினது சட்டங்களுக்கு எதிராகவும் செயற்பட்டுவருகின்றன.

இராணுவப் பகுதிகளில் அரசாங்கமும் விடுவிக்கப்படாத பகுதிகளில் விடுதலைப்புலிகளுமே அப்பிரதேசங்களில் பாதுகாப்பு நிலைமைகளுக்கு பொறுப்பு. அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள ஆயுதக் குழுக்களில் ஆயுதங்களை களைவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்து 1.8இன்படி அனைத்து தமிழ்த்துணைப்படை ஆயுதக்குழுக்களும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 30 நாட்களுக்குள் வெளியேற்றப்படவேண்டும் தற்போது அமைதி முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அந்த ஆயுதக்குழுக்கள் இயங்கிவருவதால் அக்குழுக்கள் களையப்பட வேண்டும் என்றார் அவர்.

கிழக்குப்பிரதேசத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களால் ஜனாதிபதித்தேர்தலின் போது பாரிய வன்முறைகள் நடைபெறக்கூடும் என்று பவ்ரல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியக்குழுவினர் தெரிவித்துவரும் நிலையில் கண்காணிப்புக்குழு இத்தகைய வேண்டுகோளை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.(ற)

## 'தமிழீழம் சிவக்கிறது' நூல்வெளியீடு:

# பழ.நெடுமாறனுக்கு எதிரான வழக்கு விசாரணை ஆரம்பம்

(சென்னை)

''தமிழீழம் சிவக்கிறது'' நூலை வெளியிட்டதற்கு எதிராக தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் மீது தொடரப்பட்ட வழக்கில் சாட்சிகளின் விசாரணை கடந்த வியாழக்கிழமை சென்னை நீதி மன்றில் ஆரம்பமாகியுள்ளது.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாக பழ.நெடுமாறன் புத்தகத்தைவெளியிட்ட தமிழ் முழக்கம் பதிப்பாக உரிமையாளர் சாகுல் அமீது ஆகியோர் மீது தமிழ் நாடு காவல்துறையினர் 2002ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. நீதிபதி ஏ.ஆர்.செல்வகுமார் இந்த வழக்கை விசா்ரிக்கிறார்.வழக்கின் சாட்சி விசாரணை தொடங்கியது.

காவல்துறையைச் சேர்ந்த தம்புசாமி,சேகரன,முத்துக் கிருட்டினன்,முரளிதரன் மற் றும் உள் துறையைச் சேர்ந்த இளங்கோபன், முத்துசாமி ஆகியோர் நீதிமன் றில் முன்னிலையாகி சாட்சியமளித்தனர்.

இதையடுத்து இந்த வழக்கில் விசாரணையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார். வழக்கின் விசாரனை அதிகாரி அன்று சாட்சியளிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

# தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் சேவை நல்லூர் கோட்டப் பணிப்பாளர் புகழ் மாலை

(கல்வியங்காடு)

பாடசாலைகளில் முழுமையாக பெறமுடியாத கல்வியை தனியார் கல்வி நிறுவனங்கள் ஊடாகவே பெற்றுக்கொள்ளமுடியும். இந்த வ்கையில் தனியார் கல்வி நிறுவனங்களே பூரணமான கல்விக்கு அத்திபாரமிடுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார். நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும எழுத்தாளருமான கே.வி.குணசேகரம் அண்மையில் இருபாலை மது கல்வி நிறுவனத்தில் சோ.அகிலன் தலைமையில் நடைபெற்ற வாணி விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நகரப்புற பாடசாலைகளிலுள்ள கல்வி அடைவு மட்டமானது. கிராமப்புற பாடசாலைகளைவிடக் குறைவாகவே உள்ளது. இதை கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபராயிருநது நல்லூர் கோட்ட உதவி கல்விபணிப்பாளராக சென்றபோதுதான் உணரமுடிந்தது.

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறு நகரமட்ட பாடசாலைகளில் 76 வீதம்ஆகவும் கிராமப்புற பாடசாலைகளில் 96 வீதமாகவும் காணப்படுகிறது. இதற்குக்காரணம் மாண வர்கள் கஷ்டப்பட்டு கற்பதே ஆகும்.

பாடசாலைகளில் முழுமையான கல்வி போதிக்கப்படுவதில்லை. அந்த துறைகளுக்குரிய ஆசிரியர்கள் இல்லாமையும் ஆசிரியர்களுக்கு இருக்கின்ற வேலைப் பளுவுமே இதற்குக்காரணம். ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் முழுநேரக் கல்வி போதிப்புடன் தனித் தனியான அவதானிப்பு அத்தோடு தகுதியான ஆசிரியர்கள் கல்வியைப் போதிக்கின்றனர்.

புலமைப்பரீட்சையாய் இருந்தாலும் சரி, க.பொ.த (சா/த) பரீட்சையாய் இருந்தாலும் சரி, க.பொ.த (உ.த) பரீட்சையாய் இருந்தாலும் சரி நல்ல பெறுபேறு பெறுவதற்குரிய கல்வி தனியார் நிறுவனங்களின் ஊடாகவே ஊட்டப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்கள் இல்லையெனில் எமது கண்போன்ற கல்வி குட்டிச் சுவராகிப்போயிருக்கும். தாரமும்குருவும் தலைவிதிப்படி என்ற முதுமொழிக்கிணங்க அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்விக்கின்ற குருவை, ஆசிரியரை நாம் தெய்வத்திற்கு சமனானவராக போற்றுதல் வேண்டும்.மாணவர்கள் எவ்வாறு தமது குருவை மானசீகமாக வழிபடுகின்றார்களோ அவ்வாறு அவர்கள் வாழ்க்கையில் உயரமுடியும் என்றார். (து-74)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



ஆசைகள் இல்லாத, விருத்திகள் இல்லாத தூய மனதிலேயே ஆத்மாவின் பிரதிவிம்பத்தை நாம் பார்க்கமுடியும். எனவே வைராக்கியத்தின் மூலம் நமது ஆசைகளை நாம் அறவே ஒழிக்க வேண்டும். அப்போதுதான் மனமும் அமைதியடைந்து நாம் ஆத்மசாட்சாத்காரத்தைப் பெற வழியேற்படும்.

சுவாமி விவேகானந்தர்

# சமய தீட்சை

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோயிலில் வருடந்தோறும் இலவசமாக நடைபெறும் சமயதீட்சை இன்று நடைபெற வுள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் 11 மணி வரை நடைபெறவுள்ள சமய தீட்சையில் அனைவரும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு நகருக்கு வெளியே சின்ன ஊறணியில் கைவிடப்பட்ட வீடொன்றுக்குள் இருந்து ஒருதொகுதி ஆயுதங்கள் இராணு வத்தினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள் ளப்பட்ட தேடுதலின்போது இவை கண்டெடுக் கப்பட்டதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைக்குண்டு - 2, ரி 56 ரகத் துப்பாக்கி - 1, அதற்கான ரவைகள் மற்றும் மகசீன்கள் கிளைமோர் குண்டு ஒன்று, வெடிக்கவைக் கும் கருவி ஒன்று, வயர்ரோல் ஒன்று ஆகி யன கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது. (ச)

# மீளாய்வுப் பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்

(கொழும்பு)

இவ்வருடம் நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தேற்றி மீளாய்வுசெய்ய விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளி யிடப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

பரீட்சையில் தோற்றிய 45 ஆயிரம் பேர் தமது பெறுபேறுகளை மீளாய்வுசெய்ய விண்ணப்பித்ததாகவும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் அனுர எதிரசிங்க தெரிவித் துள்ளார்.

மீளாய்வு செய்ய விண்ணப்பித்தவர்க ளின் பெறுபேறுகளில் மாற்றங்கள் இருப் பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்படும்.

பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறு பேறுகள் பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறு அவர்களின் முகவரிக்கும் அனுப்பிவைக் கப்படும் என்று அவர் மேலும் தெரிவித் தார். (ச-8)

# முக்கிய அமைச்சர்...

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இச்சந்திப்பு இரகசியமாக இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் மிகவும் இரகசியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அமைச்சர்களும் பிரதியமைச் சர்களும் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது இணக்கம் கண்டுள்ளனர். இந்த இணக்கப்பாடு என்ன என்பது பற்றி இது வரை எதுவும் வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியானதையடுத்து காபந்து அரசாங்கம் ஒன்றை அறிவிக்க இந்த அமைச்சர்கள் இணங்கி யுள்ளனர். காபந்து அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சியும், மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம்வகிப்பார்கள்.

ஜனாதிபதி பதவியேற்று காபந்து அரசை அறிவித்து 24 மணிநேரத்திற்குள் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத் தேர்தலையும் நடத்த ரணில் விக்கிரமசிங்கவும் இந்த அமைச்சர் களும் இணக்கம்கண்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

அமைச்சர்களுடனான ரணிலின் இரகசியச் சந்திப்பு அம்ப லத்திற்கு வந்ததையடுத்து சுதந்திரக் கட்சியினுள் குழப்பம் ஏற் பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணைகளை நடத்துமாறு பிரதமர் மகிந்த, ஜனாதிபதியை கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# நாட்டின் பிரஜைகள்...

எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

பல்லாண்டுகளாக தமிழ்பேசும் மக்களாகிய நாம் சந்தித்த அநியாயங்கள், அழிவு, அனர்த்தங்களோடு கூடிய நீடித்த போர்போன்ற துன்பியல் பாதைகளைக் கடந்து வந்திருக்கின் றோம். இன்று ஒரு நாகரிகமான வழியிலே அரசியல் பேச்சு வார்த்தை மூலம் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் ஒரு சுயாட்சிமுறையைக்கொண்ட அதி காரப் பகிர்வை இலக்காகக்கொண்டு நாம் பயணித்துக்கொண்டு இருக்கின்றோம்.

இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படவுள்ளவர் சகல இனத்தவரையும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களையும் மனதில்கொண்டு அவர்கள் தன்மானத்தோடு, சுயகௌரவத் தோடு அடிப்படை உரிமைகளோடும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும் அதேவேளை, எல்லா இனத்தவருக்கும் நியாய மான முறையில் நீதியோடு கூடிய சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேலும் நீதியின் அடிப்படையில் தான் எவரையும் பாதிக்காத விதத்தில் அவரவர் தேவைகளை பூர்த்தி செய்யமுடியுமென் பதை உணர்ந்து, ஏமாற்று அரசியலை முற்றாக நிராகரித்து நாட்டின் நலனையே முன்னுரிமைப்படுத்தி செயற்படக்கூடிய ஒருவராகவும் இருத்தல் இன்றியமையாததாகும்.

இப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பது நாம் இந்நாட்டின் பிரஜைகள் என்றமட்டிலும், எமக்கு கொடுக் கப்பட்டுள்ள பொறுப்புள்ள பொதுக்கடமையாகும்.

மேற்படி நம் கடமையை நாம் செய்யத்தவறினால் அண் மைக்கால தேர்தல்களில் அரங்கேறிய வாக்குகளை சட்ட விரோ தமாகத் திணிக்கும் செயல் நடக்க இடம்கொடுத்ததாய் அமை வது மட்டுமல்ல, எமக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒருவர் ஜனா திபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழிசமைத்தாகவும் அமை யும்.

எனவே எமது வாக்குரிமையை தவறாது பயன்படுத்தும் அதேவேளையில் தேர்தலின்போது வன்முறைகளை தவிர்ப் பதும் சட்டபூர்வமற்ற முறையில் நடைபெறக்கூடிய வாக்குத் திணிப்புப் பற்றி விழிப்பாய் இருப்ப தும் மக்கள் தம் வாக்குரிமையை சுதந்திரமாக செயற்படுத்த இடம ளிப்பதும் எம் அனைவரதும் தனிப் பட்டதும் பொதுவானதுமான கடப் பாடாக இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நிகழவுள்ள ஜனாதிபதித் தேர் தல் சட்ட ஒழுங்கின்படியும் நேர்மை சுதந்திரத்தோடும் இடம்பெற்று மக் கள் எவ்வித அழுத்தமும் இன்றி சுதந்திரமான முறையில் தகுதி வாய்ந்த ஒருவரை தம் ஜனாதிப தியாக தெரிவுசெய்யவேண்டு மென்று இறைவனைப் பிரார்த் திக்க உங்களைக் கேட்டுக்கொள் கின்றோம் என்று அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


கணனிப் பயிற்சி நிலைய
2 ஆம் வருட பூர்த்தி விழாவும்

மாணவர்களுக்குபெறுபேற்று
அறிக்கை வழங்கும் நிகழ்வும் - 2005

இடம்:
கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
(காரைநகர்)

காலம்:
06.11.2005 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
மாலை 3 மணி (புதிய நேரம்)

*தலைமை:*
திரு. கோ.சிறீவரதன்
*(இயக்குநர் C.T.C)*

*பிரதம விருந்தினர்:*
பேராசிரியர் திரு N.சண்முகலிங்கன்
*(தலைவர் சமூகவியல்துறை யாழ். பல்கலைக்கழகம்)*

*கௌரவ விருந்தினர்:*
திரு. C.N.மதிவதனன்
*(முகாமையாளர் யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்)*

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு. அ.குமாரவேலு
*(அதிபர் யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)*
திரு. ச.சண்முகரத்தினம்
*(துபாலதிபர் காரைநகர்)*
திரு. T.யூட்பிரேவியன்
*(காப்புறுதி நிறைவேற்று அதிகாரி யூனியன் அஷ்யூரன்ஸ்)*
திரு.இ.திருப்புகலூர்சிங்கம்
*(கிராமசேவையாளர் காரைநகர் கிழக்கு J/47)*
திரு. வே.உருத்திரசிங்கம்
*(ஆசிரியர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)*
திரு ப.ஐங்கரன்
*(சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் காரைநகர்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணனிப் பயிற்சி நிலையம்,
காரைநகர்.

இயக்குநர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

தலைமைக் காரியாலயம்,
சக்களாவோடை,
காரைநகர்.

கிளைநிறுவனம்:
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(C-1820)



சிறப்புத் தள்ளுபடி



வீடுகளில், கையிருப்பு உள்ளவரை மட்டுமே
அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய
முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M,
மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
9900/=

டயலொக் வெளிச் செல்லும் அழைப்பு ரூ.4.60

கையடக்க தொலைபேசி விற்பனைக்குண்டு
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பக்கேஜ் இணைப்புகளுக்கு
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.



தொடர்புகட்கு:
நியூ பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி
இல : 205/01 கஸ்தூரியார் வீதி
(ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்
T.P: 0712 399220, 0714 182500, 0773518330














திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் *(அலங்காரத்துடன்)*
☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்



போன்ற அனைத்துச் சேவைகளுக் கும் புத்தம்புதிய *(ஆங்கில இலக்கம் கொண்ட)* குளிரூட்டிய நவீனகார்கள், சார தியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

*தொடர்பு:* ரட்ணம்
*சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்*
T.P:0777-903090 077-3086939,0777-246117, 077-6018467
(C-9843)



EXPOAIR
your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.